# விளக்கு

செப்ரெம்பர் - ஒக்ரோபர் 2005










"வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்"

விலை 30/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகல் - 05 சுடர் - 03

# விளக்கு

"வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்"

## செவி சாய்ப்போம்

போரினாலும், சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் அழிவுக்குள் சிக்குண்டு அல்ல லுறும் எங்கள் மக்களுக்கு ஆறுதல் தேவை. வாழ்வின் துன்ப துயரங்கள் எதிர் பாராத நிகழ்வுகளால் அதிகரிக்கும் போது அவற்றிலிருந்து விடுபட இயலாமல் இன்ன லுறுவோர் அடையும் மனப்பாதிப்புக்க ள் வாழ் நாள் முழுவதுமே துயரங்களைச் சுமை யாக்கி விடுகின்றன.

தனிமை, குடும்பச்சுமை, வறுமை, இவை களோடு கூடிய உள அழுத்தங்களால் தினம் வெதும்பி வாடும் மக்களுக்கு அமைதி தேவை. உள்ளத்தில் புதைந்து வாட்டும் துய ரங்களால் உடைந்து போன இதயங்க ளோடு இயல்பு நிலை குலைந்துள்ளோர் திர ளிங்கு ஏராளம். அவர்களுக்கு இன்று வேண் டுவன அன்பு கலந்த ஆ தரவே.

அவர்களின் சுமைகளைக் குறைத்து வலிகளைக் குணப்படுத்தி அன்பைப் பகிர்ந்து கொள்வோம். உளச்சமநிலை தகர்ந்து வாழ் வோருக்கு உறுதியும் உவகையும் தரும் நட்புக் கரமிணைப்போம்.

இழப்புக்களும், பேரழிவுகளும் ஏற்படுத் திய ஆறாத வடுக்களை ஆற்றும் வழி காண் போம். இயன்றவரை இனிய வார்த்தைக ளால் அன்பும், நட்பும் வெளிப்பட அவர்க ளுடன் உறவாடுவோம். அவர்களின் மனக்கு முறல்களை, வேதனைகளை வெளிப்படுத்தி உரையாடச் சந்தர்ப்பம் வழங்குவோம். அவர் களின் மன விரக்தியை விரட்ட அவர்களின் கதைகளைக் கேட்க எமது செவிகளை அவர் களின் பக்கம் சாய்ப்போம்.

ஓர் இனத்தின் ஒளிவிளக்குகள் ஆசிரியர் களே! அவர்களின் துணிவு சமூகத்தை வளப் படுத்தும். எனவே துன்புறும் இனமும், அவர்தம் வாழ்வும் செழிப்புற வழிகாட்டுங் கள். எமது மக் களின் மகிழ்வுகளின் போது மாத்திரமல்ல; துன்ப துயரத்தின் போதும் துணை நிற்கும் மனம் பெறுவோம்.

## உள்ளே


சிறுகதைகள் - இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம்.
கந்தையா முருகதாசன்

கவிதைகள் - நெடுந்தீவு மகேஷ்
உமாபாரதி

கட்டுரைகள் - கோகிலாவாணி தேவராசா
க.கந்தசாமி
பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
என்.யூ.யாபா

சிறப்பம்சங்கள் - பொம்மலாட்டம் ஒரு கற்பித்தல் ஊடகம்
மெய்யறியக் கேளுங்கள்
வாசித்தோம் வாசிப்போம்



வெளியீடு - ஆசிரிய வாண்மை விருத்திக் குழு

இதழாசிரியர் - செ.மகேஷ்

ஆசிரிய பீட ஆலோசகர்கள் -
அ.பஞ்சலிங்கம்
பா.தனபாலன்
எஸ்.சேதுராஜா
கே.சரவணபவன்
க.கனகசிங்கம்
வே.சிவநேசன்

முகவரி - தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவை
யாழ் வலயக் கல்விப் பணிமனை
யாழ்ப்பாணம்.

விலை - 30 ரூபாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கல்வி மீள் ஒழுங்கமைப்பும் தேசிய ஆசிரியர் கல்விக் கொள்கையும்

கல்வியியல்

இன்றைய உலகு கோளமயமாக்கல் என்ற உலக ஒழுங்குக்கு உட்பட்டு வருகின்ற சூழலில், கல்வியானது அதன் பண்பிலும், அளவிலும் மாற்றங்களுக்கு உட்பட்டு, பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து



வருகின்றது. இந்த உலகளவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு இசைவான தொழில் திறன்களையும், நவீன தொழில்நுட்பத்தையும், அறிவுப் பரப்பையும் மற்றும் பொருளாதார மேம்பாட்டையும் உள்ளடக்கிய திறன் மிக்க கல்வி ஒழுங்கமைப்பின் அவசியப்பாடு கல்வியுலகில் உணரப்பட்டுள்ளது.

இதற்கான செயலளவில் இயலுமை, தகைமைப்பாடு கொண்டவர்களாக ஆசிரியர்களும், தம்மைத் தகவமைத்துக் கொள்வது காலத்தின் தேவையாகும்.

இதனைக் கருத்தில் கொண்டே ஐக்கிய நாடுகள் அமையத்தின் இணை நிறுவனமான யுனெஸ்கோ வெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"புத்தாயிரமாம் ஆண்டின் ஆசிரியருக்குத் தமது மாணவர்களிடையே காணப்படும் அடிப்படை நிபுணத்துவங்கள், மனப்பாங்கு, படைப்பாற்றல் திறன், மாற்றம் அல்லது புதுமை காணல் என்பனவற்றின் சிறப்பம்சங்கள், பலதுறைப்புலமை, மாறும் நிலைக்கேற்ப அமைதல், கொள்ளளவை அறிந்து கொள்ளல், விமரிசனப் பாங்கு, பிரச்சினைகளை இனங்காணல், மற்றும் தீர்ப்புத் திறமை என்பன பற்றிய ஆற்றல் இருக்க வேண்டும்"

இத்தகைய நோக்கினை அடைவதற்கு இதுவரை நடைமுறையிலிருந்து வருகின்ற ஆசிரியர் கல்வி முறைமையில் மீள்கட்டமைப்பு ஒழுங்கினை மேற்கொள்ள வேண்டியது எம்முன்னுள்ள காத்திரமான பணியாகும். இன்றைய கல்விக் கட்டமைப்பின் பாதகமான விளைவுகளுக்கு ஆசிரியர் வாண்மைப் பயிற்சிக் குறைபாடுகளும் காரணமெனப் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இலங்கையில் ஆசிரியர் கல்வி முறைமையானது நன்கு திட்டமிடப்படாமல் உள்ளதுடன், அதைச் செயற்படுத்தும் நிறுவனங்களுக்கிடையிலும் இசைவற்ற தொடர்பு நிலையே பேணப்பட்டு வந்துள்ளது.

இன்று இந்நாட்டில், ஆசிரியர் கல்விக்குப் பொறுப் பாக பதினேழு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் நான்கு பல்கலைக்கழக கல்விப் பீடங்களும், பதினேழு கல்விக் கல்லூரிகளும், எண்பத்து நான்கு ஆசிரியர் பயிற்சி நிலையங்களும் ஆசிரியர்களுக்கு கல்வியை வழங்கி வருகின்றன. இவை தவிர, தேசியக் கல்வி நிறுவகமும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்பள்ளிப் பாடநெறி, சிறுவர் உரிமைகள், முரண்பாடு ஆகியவை தீர்த்தல், சமாதானக் கல்வி தொடர்பில் குறுங்காலப் பயிற்சிகளை செயலாக்கப்படுத்தி வருகின்றன.

இந்நிறுவனங்கள் யாவும் ஆசிரிய வாண்மை விருத்தி பற்றிக் கூறிவந்தாலும் அவை தத்தமது நிகழ்ச்சித் திட்டங்களுக்கே முக்கியத்துவம், முன்னுரிமை கொடுப்பனவாகவே உள்ளன. இதனால்,

மு.இராசநாயகம் B.A.Dip in du M.Ed
யா/ கனகரத்தினம் ம.ம.வி.

நாட்டின் தேசிய சேவைகள், நலன்க்ள், முன்னுரிமைகள் என்பன புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளன. இது ஆசிரியர் வழங்கலுக்கும், தேவைக்குமிடையே பாரிய இடைவெளியினை ஏற்படுத்திவிட்டது.

மேலும், ஆசிரியர் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் தமக்கிடையே வேறுபாடான கால எல்லைகள், கற்கை நெறிகள், பாட உள்ளடக்கங்கள் கொண்டவையாகவே இருந்து வருகின்றன. இவை வழங்கும் டிப்ளோமாப் பட்டங்கள் என்பவை குறித்த அங்கீகாரம் பற்றிய கேள்விகளும் எழுகின்றன. குறிப்பாக தேசியக் கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள சில பட்டங்கள், டிப்ளோமாச் சான்றிதழ்கள் என்பவற்றை அங்கீகரித்து பட்டப்பின் பாடநெறிகளைத் தொடங்குவதற்குச் சில பல்கலைக்கழகங்கள் அனுமதியளிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனங்களுக்கான ஆளணி உருவாக்கல், அபிவிருத்தி மற்றும் வளப்பங்கீட்டிலும் கூட தெளிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்துடன், தொடக்கநிலை ஆசிரியர் கல்விக்கான கலைத் திட்டமானது ஆசிரியரிடம் வேண்டப்படுகின்ற நிபுணத்துவம், திறமைகள், மனப்பாங்கு, விழுமியங்கள் என்பவற்றுடன், மாறிவரும் உலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளும் ஆளுமையையும் ஆசிரியர்களிடத்து விருத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தவிர, தேசிய ஆசிரியர் கல்விக் கொள்கையின் படி இன்னோரம்சமாக சேவையில் உள்ள ஆசிரியர்களின் தொடர் கல்வியை மேம்படுத்தல் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சேவையிலுள்ள ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிக்க இதன் மூலம் வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்தொடர் கல்வி எனப்படுவது வாழ் நாட் கல்விச் செயற்பாட்டினை அடி ஆதாரமாகக் கொண்டது. சேவையிலுள்ள ஆசிரியருக்கான தொடர்கல்வி என்பது தொடர் செயல் முறையாகக் கருதப்படுவதுடன் முன் சேவைப் பயிற்சி, சேவைக் காலப் பயிற்சி என்பவற்றை உள்ளடகியதாகவும் உள்ளது.

தொடர்கல்விப் பாடநெறிகள் பிரதானமாக நான்கு வகையாக வகுக்கப்பட்டுள்ளன.

அவையாவன,

1. தரமேம்பாடு
2. தகைமை விருத்தி
3. மீள் பயிற்சிகள்
4. புத்தாக்கச் செயற்பாடுகள்

என்பவையாகும்.

இவற்றில் சில பாட நெறிகள் அறிவு மட்டத்தை விருத்தி செய்வனவாகவும், பதவி உயர்வுக்குத் தேவையான பிரமாணங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட தேசிய ஆசிரியர் கல்விக் கொள்கையானது கட்டங்கட்டமாக அமுல் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது முழுமையாக அமுலாக்கம் செய்யப்படுகையில், கல்வியின் புத்தாளர்களாக சமூக மாற்றங்களின் முகவர்களாக ஆசிரியர்கள் உருவாக்கம் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், எதிர்காலத்தில் ஆசிரியர் கல்வியானது புதிய கல்விச் சவால்களுக்கு பொருத்தப்பாடுடைய அறிவுப் பெருக்கத்தினையும், பாட உள்ளடக்கமும் குறித்த உபகரணப் பயன்பாட்டினையும் கொண்ட கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளதுடன், வினைத்திறனுடைய ஆசிரியர் சமூகத்தின் உருவாக்கத்துக்கும் வழிவகுக்கின்றது.

ஆசிரியர் கல்வியின் இத்தகைய மீள் ஒழுங்கமைப்பானது ஆசிரியர்களைப் பதவி நிலையிலும், அந்தஸ்து நிலையிலும் ஓர் உயர்வான நிலை நோக்கி முன்னகர்த்தும் என நம்பப்படுகிறது.

கொள்கைகள் பின்பற்றப்படுவதில்லை.

இத்தகைய ஆசிரியர் கல்வியில் நிலவும் நலிவுகள், ஏற்றத்தாழ்வுகள், போதாமைகள், வினையாற்றலின்மை காரணமாக ஆசிரியர் கல்வியை மீள்கட்டமைப்புச் செய்யவேண்டியது அவசியமாகும். இதனை நன்குணர்ந்த தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபையானது ஆசிரியர் கல்வி குறித்த தேசியக் கொள்கையினை முன்வைத்துள்ளது.

அந்த வகையில், ஆசிரியர் கல்விக்கான தேசியக் கொள்கையின்படி, எதிர்காலத்தில் ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி நிலைப்படுத்தல், சீரமைத்தல் தொடர்பான புதிய நடைமுறைகள் பின் பற்றப்பட விருப்பதோடு ஆசிரியர் தேவைகள், வழங்கல்கள் என்பதில் இசைவினைப் பேண ஆசிரியர்- மாணவர் விகிதாசாரம் இறுதியான ஒரு சாதனமாகக் கருதப்படவுள்ளது. ஆசிரியர்களைப் பாடசாலைக்கு நியமிக்க முன்பு அவர்களைத் திசைமுகப்படுத்தித் துரித பாட நெறியொன்று அறிமுகப்படுத்தப்படும். புதிதாகச் சேரும் சகல ஆசிரியர்களுக்கும் தேசிய ஆசிரிய கல்வி அதிகார சபையினால் அடிப்படைத் தொழிற் பயிற்சி வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

அத்துடன், பல்கலைக்கழகங்களுக்குத் தேர்வு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவுத் தகைமை பெற்றுள்ளவர்களிலிருந்து கல்விக் கல்லூரிகளுக்குத் தேவையான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்பதுடன் இவர்கள் பாடசாலைகளின் பல்வகைத் தரங்களுக்குப் பதவி நிலைப்படுத்தப் படவுள்ளனர்.

ஆசிரியர் கல்வி தொடர்பான தேசியக் கொள்கையின் படி முதன்மை நிறுவனமாக தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை விளங்கும். பல்கலைக்கழகங்கள், தேசியக் கல்விக் கல்லூரிகள், தேசியக் கல்வி நிறுவகம் என்பவை கல்விமாணிப் பாடநெறி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா போன்ற கற்கைகள் மூலம் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்குகின்றன. இக்கற்கை நெறிக்கான பாட உள்ளடக்கம் தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

விளக்கு நாளிதழ் நடாத்திய 2004 ஆசிரியர் நாள் சிறுகதை எழுத்தாக்கப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற சிறு கதை.

# வினை நிலங்கள்



"சீ நாயே, உனக்கு எத்தின தரம்டா சொல்லுறது, மாடு மாதிரி வளர்ந்திருக்காய். சொன்னால் சொன்னதைச் செய்யிறதுக்கு கழுதை, அங்க நிண்டு கொண்டு, வாடா இங்க எருமை"

"ஆ.நான் தவறுதலாக மிருகக்காட்சிச்சாலைக்குள் வந்து விட்டேனோ" எனச் சந்தேகத்துடன் நாற்புறமும் பார்த்தேன், சந்தேகமில்லை. நான் இருந்துகொண்டிருப்பது சிற்றுண்டிச்சாலைதான். அப்படியானால் கொஞ்சம் முன்னதாகக் கேட்ட பெயர்கள் நாய், மாடு, கழுதை, எருமை இவையெல்லாம்? மிருகங்கள் மிருகக்காட்சிச் சாலையில் தான் வாழவேண்டும் என்பதில்லை. அவை சிற்றுண்டிச்சாலையிலும் வசிக்கலாம். சாதாரண மனிதர்களால் அவற்றை அறிந்துகொள்ள முடியாவிட்டாலும், சில முதலாளிகளின் ஆந்தை விழிகளால் அந்த மிருகங்களை அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது.

பாவம் வேலைக்காரப் பையன், கண்களில் பூத்த கண்ணீரை மறைக்கத் துடிக்கின்ற கரங்களுடன் முதலாளியின் முன்னால் வந்து நிற்கின்றான்.

"என்னடா எத்தன நாளாய்ச் சொல்றன், உன்ர வேலையைப் பார்க்க உனக்கு நேரமில்லை. அதுக்கு மேலால அங்க நிண்டு...." பையன் எதிர்பார்த்தானோ என்னவோ, கன்னத்தில் 'பளார்' என்ற ஒரு அறை. பிஞ்சுக் கைகள் கன்னத்தைத் தடவுகின்றன. கண்ணீர் அருவியாகின்றது. முதலாளியின் மூர்க்கத்தனம் அடங்கவில்லைப் போலும். பையனைப் பிடித்து இழுத்துச் செல்கின்றார்.

"உன்னை இப்படியே விட்டால் நீ உருப்பட மாட்டாய்டா. உனக்குச் சரியான பாடம் கற்பித்தால் தான் புத்தி வரும்" கொதித்துக்கொண்டிருக்கின்ற வெந்நீர், 'டம்ளர்' ஒன்றில் நிரப்பப்படுகிறது. வேலைக்காரப் பையன் அழுது மன்றாடுகின்றான்.

"வேண்டாம் முதலாளி என்னை மன்னிச்சிடுங்க. இந்தத் தடவை மட்டும். இனி நான் ஒருதப்பும் செய்ய மாட்டன். முதலாளி..." வேலையாளின் வேதனைக் குரல் எஜமான் செவிகளுக்கு எப்படி எட்ட முடியும். கணப்பொழுதுக்குள்.... பையனின் முகத்தை வெந்நீர் பதம் பார்க்கிறது. பையன் துடித்துப் புரண்டு அழுகின்றான். வெற்று 'டம்ளர்' வீசியெறியப்படுகின்றது. மிருகங்களுக்கு ஐந்தறிவு உண்டு. பகுத்தறிவை இழந்த மனிதனும் ஐந்தறிவு உடையவனே.

வேலைக்காரப் பையனின் பரிதாப நிலை என் நெஞ்சை உலுக்குகின்றது. சிறுவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம். அவனுக்கு ஏன் இத்தகைய கொடிய தண்டனை அறியத் துடிக்கிறது உள்ளம். முதலாளி உள்ளே சென்றுவிடவே, பையனை நெருங்கிய நான் மெதுவான குரலில்,

"தம்பி நீ என்ன தப்புச் செய்தாய்?" இப்படிக் கேட்க மனம் வரவில்லைத்தான். இருந்தாலும் கேட்டு விட்டேன். அவனது முகம் சோகத்தின் சாயலோடு, "சதீஸ் படித்துக் கொண்டிருந்தான். எனக்கும் படிக்க ஆசையாய் இருந்திச்சு அவனுக்குப் பக்கத்திலபோய் பார்த்துக்கொண்டு நிண்டன். அதுதான்...."


பையன் திக்கித் திணறிக் கூறினான். என் உணர்வுகள் ஒரு கணம் உறைந்துபோய் விட்டன. இதற்கு இப்படியொரு தண்டனையா!

"சதீஸ் என்று யாரைத்தம்பி சொல்லுறாய்"

"முதலாளியின் மகன்தான் ஐயா"

"உனக்கு அம்மா, அப்பா யாருமே இல்லையா? உன்னை யார் இங்க கொண்டு வந்து சேர்த்தார்கள்?" அறிய வேண்டுமென்ற ஆவலில் கேள்விமேல் கேள்வி கேட்டேன்.

"எனக்கு அம்மாவும், இரண்டு தங்கச்சியும் இருக்காக்கங்கள். அப்பா செத்திட்டாரு. பணக்கஸ்டத்தால



அம்மாதான் என்னை இங்க சேர்த்து விட்டாங்கள்'' எனக்கு நிலமை விளங்கிவிட்டது.

"தம்பி உனக்குப் படிக்க விருப்பம்தானே. அதுக்கு நான் ஒழுங்கு செய்தால் நீ படிப்பியா?''

பையனின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியை வார்த்தைகளால் கூறிவிட முடியாது.

"ஓமையா, எனக்குப் படிக்க விருப்பம். ஆனால், முதலாளி...''

"அதைப்பற்றி நீ யோசியாதை எல்லாம் நான் பார்க்கிறேன்.''

"சேர், என்ன சேர், அப்படி யோசிக்கிறீர்கள். உங்களைக் கொஞ்சம் ஓய்வெடுக்கவிட்டால் யோசிக்கி றீங்கள்'' டொக்டரின் குரல் கேட்ட நான், நினைவுச் சிறையிலிருந்து விடுபட்டேன்.

"என்ன சேர், அப்படிக் கடுமையான யோசனை'' டொக்டர் மீண்டும் கேட்டார்.

"இல்லைத்தம்பி அது வந்து....'' சமாளித்தேன்.

"இல்லைசேர், சொல்லுங்கோ... என்ர வாழ்வுக்கு ஒளி தந்த உங்களுக்கு எது வந்தாலும் நான் இருக்கிறன். சொல்லுங்கோ'' எனது கண்கள் பனித்தன.

"தம்பி குமார், இண்டைக்கு உம்மை ஒரு டொக்டரா கப் பார்க்கேக்க நான் எவ்வளவு சந்தோசப்படுறன். நீர் ஒரு தேனீர்க்கடையில வேலை செய்யேக்க பட்ட துன்பங்களை நினைச்சுப் பார்த்தனான். அவ்வளவு தான்''

"சேர், அதை நானும் நினைச்சுப் பார்க்கிறனான். அன்றைக்கு என்னை நீங்கள் சிறை மீட்டதிலயிருந்து இன்றைக்கு நான் இங்க நிற்கிறவரைக்கும் நீங்கள் செய்த உதவியை என்னால மறக்க ஏலாது சேர்''

உணர்வு ததும்பிய குரலில் டொக்டர் கூறவே,

"இல்லைத் தம்பி, அது எங்கட சேவை. நாங்கள் செய்ய வேண்டிய தேவை''

"இல்லை சேர். எல்லாருக்கும் அப்படியொரு மனசு வாறதில்லை. நீங்கள் என்ர வாழ்க்கையை உயர்த்திய தெய்வம் என்று தான் என்னால சொல்ல ஏலும். சரி சேர், நீங்கள் கொஞ்சம் ஓய்வு எடுங்கோ. நான் வாட் பார்த்திட்டு பிறகு வந்து சந்திக்கிறன்.

டொக்டர் செல்வதையே பார்த்திருந்தேன். என் உள்ளத்து உணர்வுகளை அடக்க முடியவில்லை. மேலும், நினைவு பூக்களாக விரியத் தொடங்கின.

குமார் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்தில் ஒருநாள், ஏழாம் பாடவேளை கற்றல் - கற்பித்தல் பற்றிய விடயங்கள் தொடர்பாக ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை அதிபர் நடாத்திக் கொண்டிருந்தார். அப்போது,

"சேர், என்ர வகுப்பில குமார் என்ற மாணவன் இருக்கிறான். அவன் ஒழுங்கா பேனா, கொப்பி எதுவுமே கொண்டு வாறேல்ல. ஆனால், படிப்பில கெட்டிக்காரன். இவன் எதுவுமே கொண்டுவராததால இவனுக்குப் படிப்பிக்கிறதுக்கு எனக்குச் சரியான கஸ்டமாயிருக்கு'' இது வனிதா ரீச்சரின் முறைப்பாடு.

"ஓம் சேர், இவன் குமார்தான் அண்டைக்கு மாவட்ட மட்ட உடற் பயிற்சிப் போட்டிக்குக் கூட்டிக்கொண்டு போகேக்க சப்பாத்துப் போடாமல் வந்தவன். ஏன் போடேல்ல என்று கேட்டதுக்கு, "அம்மா வாங்கித் தரேல்ல'' என்று சொல்லுறான். இப்படியான பெற்றோர் இருக்கிற வரைக்கும் எங்களால ஒன்றுமே செய்ய ஏலாது சேர்''

**இரத்தினனேஸ்வரி சிவசிதம்பரம்**
**கிளி/கண்டாவளைக் கல்விக் கோட்டம்,**
**தருமபுரம்.**

இது அரவிந்தன் மாஸ்ரருடைய ஆதங்கம்.

"சேர், என்னை மன்னிக்கவேணும். எல்லாரும் குமாரைப் பற்றிச் சொல்லுறம் எண்டு நீங்கள் நினைப்பியள். குமார் ஒரே ஊத்தைச் சேட்டைத்தான் போட்டுக் கொண்டு வாறான். அதோட எப்பவும் சோர் வாய் இருப்பான். அவன் படுசோம்பேறி எண்டுதான் நினைக்கிறன். அவனால மற்றைப் பிள்ளையளின்ர டிசிப்பிளினையும் கவனிக்க ஏலாமல் இருக்குது. ஆனால், ஒன்று சேர் எல்லாப் பாடத்திலயும் நல்ல புள்ளி எடுக்கிறான்'' இது விமலா ரீச்சரின் விமர்சனம். இவற்றையெல்லாம் செவி மடுத்த அதிபர்,

"இந்த மாணவன் சில வசதியீனங்களால இப்படி யான முறைப்பாடுகளோட வகுப்புக்கு வரக்கூடும். அதனைத் தட்டிக் கொடுக்க வேண்டியது ஆசிரியர்களா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய உங்களுடைய பொறுப்பு"

பின்பு ஒருநாள், அதிபர் என்னை அலுவலகத்திற்கு அழைத்தார்.

"மாஸ்டர் உங்களோட ஒரு விசயம் கதைக்கிறதுக் குக் கூப்பிட்டனான்"

"சொல்லுங்கோ சேர்"

"வனிதா ரீச்சற்ற வகுப்பில படிக்கிறான் குமார். அவனை நீங்கள் தான் இந்தப் பாடசாலையில சேர்த்து விட்டனீங்கள். அவனைப் பற்றி எல்லாரும் முறைப்பாடு சொல்லுறவியள். ஆனால், அவனில இப்ப நல்ல மாற்றம் இருக்கு. பாடசாலைக்கு ஒழுங்கா வாறான். கற்றல் உபகரணங்கள் எல்லாம் கொண்டு வாறான். உடுப்பும் நல்ல தூய்மையாய் இருக்கு. நல்ல சுறுசுறுப்பாயும் செயற்படுறான். குமாரை அழைத்துக் கதைச்சன் இந்த மாற்றங்களுக்கு நீங்கள் தான் காரணம்" என்று அதிபர் புன்முறுவலோடு என்னைப் பார்த்தார். "உண்மைதான் சேர். ஒவ்வொரு மாணவனை யும் சரியாக அறிந்துகொள்ள வேண்டுமென்றால் அவனுடைய வாழ்வியல் பின்னணியை ஆராய்ந்து அறிய வேண்டும். அவர்களுக்கு ஏற்ற வழிகாட்டுத லோடு வழங்கப்படும் கல்வியில் தான் கற்பித்தலின் வெற்றி தங்கியுள்ளது. சிறுவர்களுக்கு உதவி வழங்குவதற்கென்று எத்தனையோ அமைப்புக்கள் இருக்கின்றன. அவற்றின் ஊடாக உதவி பெறுவதற்கு ஏற்பாடு செய்தாலே அது அவர்களுக்கு நாம் செய்யும் பேருதவியாக அமையலாம். குமார் தந்தையை இழந்ததொரு மாணவன் தாய் கூலி வேலை செய்கின் றார். இத்தகையதொரு சூழலிலிருந்து வருகின்ற பிள்ளை எத்தனையோ அழுத்தங்களைச் சந்திக்கின்றான். பணக்கஸ்டங்கள் மட்டுமல்ல, மனக் கஸ்டங்களும் இருக்கின்றன. குமார் படிப்பில் மிகவும் ஆர்வம் கொண்டவன் அவனுக்கென்றொரு நல்ல எதிர்காலம் உண்டு. அந்த எதிர்காலத்தை அடைவதற்கு ஏணிப் படியாக இருக்கவே நான் விரும்புறன்" ஏதோவோர் உந்துதலில் என் உள்ளத்து உணர்வுகளை அப்படியே அதிபரிடம் சமர்ப்பித்தேன்.

"உங்கட கருத்தை நானும் ஏற்றுக்கொள்ளுறன் மாஸ்ரர். உங்களைப் போன்று ஒவ்வொருவரும் இருக்கவேண்டுமென்று நான் விரும்புறன். மாணவ வித்துக்களை வளர்த்தெடுக்கும் விளைநிலங்கள் தான். ஆசிரியர்கள்...."

தூரத்தே டொக்டர் குமார் நடந்துவருவது தெரிகி றது. பிஞ்சிலே கருகிப்போகவிருந்த செழுமையான வாழ்வொன்றை காயாக்கி, கனியாக்கிய பெருமை என்னுள் ஊற்றெடுக்கவே நினைவு வலையுள் மகிழ்வு சிக்கிக் கொண்டது.

## அன்னை பூபதி

இந்திய இராணுவம் ஈழத்து மண்ணில்
இழைத்த கொடுமையற,
நொந்த தமிழரின் நெஞ்சம் வலுப்பெற
நோக்கி உரிமை பெற
வந்தனை செய்தலில்லை யெனச்சாத்வீக
வலிமைகொள் போர் தொடுத்தாள்.

நிந்தனைக் கெதிராய் நிமிர்ந்தவள்- பூபதி
நீதியின் தேவதையாய்
தந்தனள் தன்னுயிர் -தாயவள் இன்னுயிர்
தர்மத்தின் வேர் பரவ
சந்ததி தோறும் சரித்திரம் வாழ்த்திடச்
சாவிலே மேன்மையுற்றாள்.

- நெடுந்தீவு மகேஷ்.

## சமாதானத்தின் நிலவு



வன்செயலின்மைசமாதானமல்ல
போர் நிறுத்தம் சமாதானமல்ல.
பக்கச் சார்பின்மைசமாதானமல்ல
அமைதியானதோற்றம்சமாதானமல்ல
வலிந்துதிணிக்கப்படுதல்சமாதானமல்ல.

மனதின் அமைதி நிலையே சமாதானம்
சமூகத்துடன் ஒத்திசைவாக
வாழும் நிலையே சமாதானம்
இயற்கை சுற்றாடலுடன்
இயைபுற வாழும் நிலையே சமாதானம்
இவற்றின் முழுமையான
ஒன்றிணைந்த நிலையே சமாதானம்.

ஜெவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தரின் கல்விப் பணி

விளக்கு தாளிகை நடத்திய 2004 ஆசிரியர்கள் கட்டுரைப்போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற கட்டுரை.

கோகிலாவாணி தேவராசா
மு/மல்லாவி மத்திய கல்லூரி.
யோகபுரம்.

பொதுநலன் கருதாது, தனித்திருந்து பலவினையறுக்கத் தவமியற்றும் பண்டைய துறவற நெறிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தான்வாழும் சமூகத்தின் நலன் கருதித் தன்னலமற்ற தொண்டையே தவமாய்க் கொண்ட புதுமைத்துறவி, முத்தமிழ் வித்தகரெனத் தமிழுலகம் போற்றும் சுவாமி விபுலாநந்தரின் பணிகள் பலதரப்பட்டவை. இறையியல், கல்வி, சமூகம், இலக்கியம் என்பவற்றை அடித்தளமாகக்கொண்டு அவரது பணிகள் பரந்து விரிந்து சென்றன.



"ஈழமுதற்பணி இமயம் வரை கொடிகட்டும் இசைத்தமிழன்
மாதவ விபுலாநந்தன் வாழ்கெனக் கூவாய் வரிக்குயிலே"

என்னும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் 'மீட்சிப் பத்து' அடிகளாரின் அளவற்ற பணிகளை அடியிட்டுக் காட்டுகிறது. அவற்றுள் அடிகளின் கல்விப் பணிகள் பெரிதும் போற்றத் தகுந்தவை.

ஆழ்ந்து, அகன்று செல்லும் அடிகளது கல்விப் பணிகள், மொழி, சமயம், உளவியல், அழகியல், விஞ்ஞானம், தொழிற்கல்வி, பெண்கல்வி என்பவற்றின் அடிப்படையிலும் கற்றல், கற்பித்தல் தொடர்பிலும் அமைந்தன. சுவாமிகளது கல்விச் சிந்தனைகளும், கொள்கைகளும் அவரது கல்வித் தொண்டுகளில் இணைந்து வெளிப்படக் காணலாம்.

அடிகளாரின் கல்வித் தொண்டைப் பொறுத்தமட்டில் ஆரம்ப காலத்தில் ஆசிரியப் பணியுடனே அவரது தொண்டுகளும் ஆரம்பமாகின்றன. அந்தவேளையில் விபுலாநந்த அடிகள் தமது அறிவு, திறன், தகைமை என்பவற்றை மேலும் விருத்தி செய்வதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். அதனோடு இணைந்து தமது கற்பித்தற் பணிகளையும் மிகச் சிறப்பாக மேற்கொண்டார். கற்பித்தற் பணி அடிகளாருக்கு எப்போதுமே மிகவும் உவப்பானதாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலத்தில் அவரது சிறப்பு வெளிப்பட்டு நின்றதேயன்றி சுவாமிகளின் தன்னலமற்ற சேவைநோக்கும், பெருமையும் வெளிப்பட்டுத் தோன்ற வாய்ப்பிருக்கவில்லை. 1920 ஆம் ஆண்டுவரை அவரது கல்வித் தொண்டு ஆசிரியப் பணியுடன் இணைந்தே காணப்பட்டது.

1920 ஆம் ஆண்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்குத் தன்னாலான முழு முயற்சியையும் மேற்கொண்டார். இந்தக் காலத்தில் சுன்னாகம் தி.சதாசிவ ஐயரோடு கொண்டிருந்த தொடர்பு காரணமாக ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் முயற்சிகளுக்கும், செயற்பாடுகளுக்கும், அதன் வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்களவு தொண்டாற்றினார். இந்தச் சங்கத்தினரால் நடத்தப்படும் பண்டிதர் பரீட்சைக்கான விரிவான பாடத்திட்ட மொன்றும் இவரால் வகுத்துக் கொடுக்கப்பட்டது. ஒரு பல்கலைக் கழகத்துக்குரிய தரத்தோடு இந்தச் சங்கம் மிளிரவேண்டுமென்ற வேணவாவோடு விபுலாநந்த அடிகள் செயற்பட்டனர்.

சுவாமிகள் துறவு வாழ்வை மேற்கொண்ட அடுத்த நிலையில் - 1922 ஆம் ஆண்டின் பின்பு - பரந்து விரிந்த நிலையில் இவர் கல்விப்பணி புரிவதற்கான ஏதுநிலை பெரிதும் அமையலாயிற்று. இந்தக் காலம் முதலாக சமூகப் பணியும், கல்விப் பணியுமே பாவூடுநூலாக அடிகளாரின் வாழ்வோடு பிரிவின்றி அமைந்தது.

இந்தக் காலகட்டத்திலேயே, அடிகளின் கல்விப் புலமையையும், ஆளுமையையும் நன்குணர்ந்துகொண்ட இராமகிருஷ்ண மிஷன் நிர்வாகம், இலங்கையிலுள்ள அதன் பள்ளிகளை ஏற்று நடத்தும் மிக முக்கியமான பொறுப்பை அடிகளிடம் வழங்கியது. சிறிதுகால இடைவெளியோடு 1939 ஆம் ஆண்டு வரையான மிக நீண்டகாலம் அடிகளார் இந்தப் பொறுப்பை ஏற்று உன்னத பணி புரிந்தார்.

இந்தக் காலம் முதலாக இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாக, கிழக்கிலங்கையின் கல்வி வரலாற்றில் விபுலாநந்த அடிகளாரின் சேவை முத்திரை ஆழப் பதிக்கப்பட்டுள்ளதை எவராலும் மறுக்க இயலாது. விபுலாநந்த அடிகளின் வழிகாட்டலில், கிழக்கிலங்கையில், இராமகிருஷ்ண சபையினரின் பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் கல்விமுறை சீராக்கம் பெற்றது. முதன் முதலில் இந்து மாணவர்கள் இந்து சமயச் சூழலில் கற்பதற்கு அடிகளார் வழிவகுத்தார்.

மட்டக்களப்பிலும், திருமலையிலும், ஏனைய இடங்களிலும் நல்லதோர் இந்து சமயச் சூழலிலான பள்ளிகளையும் கட்டி வளர்ப்பதில் சுவாமிகள் கண்ணுங் கருத்துமாக இருந்தார். திருமலை ஸ்ரீ கோணேசுவர வித்தியாலயம், திருமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் போன்றவை இது தொடர்பிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

அடிகளாரின் உன்னத கல்விப் பணியின் உயரிய எடுத்துக் காட்டாய் விளங்கும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், கவிகுர் தாகூரின் 'சாந்தி நிகேதனு'க்கு நிகராக அவரது, கல்விக்கூட மொன்றின் கனவுகளின் வெளிப்பாடாய் அடிக்கல்லிட்டு அமைக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் ஆங்கிலக் கல்விக்காக மதம் மாறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, சொந்தப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை மீறாமலும் ஆங்கிலக் கல்வியைப் பெறக்கூடியதாகவும் கல்விக் கூடங்கள் உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அடிகளாரின் செயற்பாடாகவே மேற்படி கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில், இந்து மாணவர்கள் மட்டுமன்றி இஸ்லாமிய மாணவர்களும் பயன்பெற வழிசெய்யப்பட்டிருந் தமை அவரது பரந்த மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாகும். பள்ளிகள் பல அமைத்ததோடு மாணவர் தங்குமில்லங்கள் பலவும் இவரால் அமைக்கப்பட்டன. கிழக்கில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலும் வண்ணை வைத்தீஸ்வராவைப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்குப் பணிபுரிந்தார். சைவக் கல்விச்சாலையொன்று தலைநகர் கொழும்பிலே அமைய வேண்டுமென்ற பெருவிருப்போடு அடிகளால் உருவாக் கப்பட்டதே கொழும்பு விவேகா னந்தா வித்தியாலயமாகும். பெண்கல்வியின் அவசியம் கருதி காரைதீவில் சாரதா வித்தியால யத்துக்கு அடிகளாரால் அடிக்கல் நாட்டப்பட்டதோடு, கல்லடி உப்போடை பெண்கள் உயர் தர பாடசாலையும் இராமகிரு ஷ்ண சபையினராற் பொறுப் பேற்கப் பட்டது.

**அடிகளாரின் உன்னத கல்விப் பணியின் உயரிய எடுத்துக்காட் டாய் விளங்கும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், கவிஞர் தாகூரின் மசாந்தி நிகேதனுடுக்கு நிகரானது.**

அந்தக் கால சூழலுக்கேற்ப மட்டக்களப்பிலும், யாழ்ப்பா ணம், லுணுவில, திருகோணமலை, கொழும்பு எனப் பிற இடங்களிலும் இராமகிருஷ்ண சபைப் பாடசாலைகளை ஆரம்பிக்கவும், ஆரம்பித்தவற்றைப் பதிவுசெய்யவும் விபுலா நந்த அடிகள் முன்னின்று உழைத்தார். தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைத் தமது மக்களுக்காக உச்ச அளவில் பயன்படுத் திய சுவாமிகளின் தொண்டுள்ளம் போற்றுதற்குரியது.

தொடர்ந்து, பல்கலைக்கழகங்களில் அடிகளார் பதவிகள் வகித்ததோடு அவரது கல்விப் பணிகள் மேலும் பரந்து விரி கின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், கீழைத்தேய கல்விப் பீடத்தின் தலைவராக வும் கடமைபுரிந்த வேளையில் ஆற்றிய கல்விப் பணிகள் குறிப் பிடத்தக்கவை. 1931ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தில் முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியரா யமர்ந்து அந்தத் தமிழ்த் துறைக்குரிய பாடத்திட்டத்தை வகுத் தமைத்தார். தமிழ்த் துறையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த தோடு தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி முன்னேற்றம் கருதியும் பாடுபட்டார். அந்த வேளையில் பாரதியார் கழகத்தை உருவாக்கி, பாரதி பெருமை யைப் பரப்பும் பணியை மேற்கொண்டார். இவராற்றிய அனேக மேடைப் பேச்சுகள் யாவும் தனிச்சிறப்பும், ஆளுமையுமுள் ளவை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையடுத்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதற்றமிழ்த்துறைப் பேராசிரியராகக் கடமைபுரிய அழைக்கப்பட்டார். இலங்கையில் அமையவேண் டிய பல்கலைக்கழகம் எவ்வாறு அமையவேண்டுமென்ற தமது கருத்தை முன்பே, மிக அழகாகத் தொடர் கட்டுரையாகப் பத்திரி கையிலெழுதினார். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இவரது வருகையோடு புதுப் பொலிவு பெற்றது. இங்கிருந்து தமது வாழ்வினிறுதிவரை அடிகளார் அரும் பெருங்கல்வித் தொண்டுகள் பல ஆற்றினார்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுமாணி, தமிழ்வித்துவான் வகுப்புகளைத் தொடங்கிவைத்து, தக்கோரைத் தெரிந்து ஊக்குவித்து உயர்த்தினார். இந்த வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களையும் வகுத்தார். சிங்கள மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கான தமிழ் வகுப்புகளை ஆரம்பித்து வைத்தார். பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பாடத்தைத் தமிழ் மூலம் பரீட்சைகளில் எழுத வழி சமைத்தார்.

ஆசிரியராக, அதிபராக, பேராசிரியராகப் பல்கலைக்கழகத் தலைவராக அமர்ந்து அரிய கல்விப் பணிகள் புரிந்தவாறே அடிகள் பத்திரிகையாசிரியராகவுமிருந்து ஆற்றிய தொண்டுகள் காத்திரமானவை. 'தமிழ் மொழியின் தற்கால நிலையும் தமிழர் தம் கடமையும்' என அடிகள் எழுதிய கட்டுரையில் தமிழின் பண்டைய சிறப்புகளை எடுத்துக்காட்டி, அதன் தற்போதைய அவலநிலையைச் சுட்டி கல்விமான்களும், பல்கலைக்கழகங்க ளும் இதில் கவனஞ் செலுத்தவேண்டுமென வற்புறுத்தும் அடிக ளின் சிறப்புடைக் கட்டுரைபோன்ற பல கட்டுரைகள் பத்திரிகை ளிலும், சஞ்சிகைகளிலும் இவரால் எழுதப்பட்டன.

'விவேகாநந்தன்' பத்திரிகை யாசிரியராகவிருந்த காலத்தில் சைவப் பிள்ளைகளின் கல்வி, யாழ்.பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்றன பற்றி அடிகள் எழுதிய கருத்து கள் நம்மவர் மத்தியில் கல்வி பற்றி ஆழமான சிந்தனையைத் தோற்றுவிக்கக் காரணமா னது. "பிரபுத்த பாரதம்" பத்திரி கையும் அவ்வாறே அமைந்தது.

விபுலானந்த அடிகளின் மொழிபெயர்ப்புப் பணி, கலைச் சொல்லாக்கம் என்பனவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. மொழிபெயர்ப்பாளனின் புலமை மிகுதியாகப் புலப்படும் 'தகவல் மொழியாக்க வகை' சார்ந்த மொழி பெயர்ப்புகள் பலவற்றை அடிகள் செய்துள்ளார். அவ்வாறே மேலைத்தேய அறிவியல் நூல்களைத் தமிழில் மாணவர் பயிலவும், அறிவியல் ஆய்வு களைத் தமிழில் வெளி யிடவும் தகுந்த கலைச்சொற்களைத் தமிழ்ப்படுத்தவேண்டுமென்ற அவாவுடன் அடிகள் தொண்டாற் றியதோடு பிறரையும் தூண்டி னார். தமிழில் விஞ்ஞானக் கல்வி விரைந்து வளர அடிகளாரின் தலைமையில் உருவான கலைச் சொல்லகராதி பெருந்துணை யாய் நின்று நிலைக்கின்றது. இன்றும் இதன் துணையுடனேயே வேதியல், கணித, அரசியல் நூல்கள் ஆக்கப்படுகின்றன. இவ் வாறே தமிழ்மொழியின் 'ஒலியியல்' தொடர்பாகவும் ஆய்வுகள் நடத்தி வெளியிட்டார்.

மேலும், இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவியேற்ற காலத்திலிருந்து கல்விப் பகுதியின் பல்வேறு சபைகளிலும் அங்கம் வகித்து வந்த அடிகளார் இந்தச் சந்தர்ப்பங் களையெல்லாம் பயன்படுத்தித் தம்மாலான உச்ச உழைப்பை கல்வித்துறைக்கீந்தார்.

முடிவாக, இருபதாம் நூற்றாண்டின் இலங்கைக் கல்விச் சிந்தனையாளர் வரிசையில் தமக்கெனத் தனியிடம் பெறும் விபுலாநந்த அடிகளார் இலங்கைக் கல்வி வரலாற்றில் குறிப்பாகத் தமிழர் தம் கல்வி வரலாற்றில் மறக்கவியலாதவர். அதிலும் கிழக்கிலங்கையின் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமானவர். இவரது அறிவின் பயன்பாடும் மேன்மையும் அளவிடற்கரியது. பன்மொழியறிவும் மூவியற் புலமையுமிக்க அடிகளது யாழ்நூல் மதங்கசூளாமணி ஆகிய நூல்களின் பெருமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

இவரது பன்மொழிப் புலமை காரணமாக நல்ல கருத்துக் களைப் பிறமொழியிலிருந்து தமிழிலும் தமிழின் மேன்மை களைத் தமிழிலிருந்து பிறமொழிகளிலும் பெயர்த்துப் பெரும் பணியாற்றினார்.

விபுலானந்த அடிகளின் கல்வித்தொண்டு குறிப்பாகச் சைவச் சிறார்களைப் பகைப் புலமாகக் கொண்டு சைவத்தையும் தமிழையுமிணைந்துப் பிறமதக்காழ்ப் பின்பற்றியமைந்தமை குறிப்பிடத்தக்கது. நாவலரை அடியொற்றி உன்னத பணிகளாற் றிய விபுலானந்த அடிகள் கிழக்கிலங்கையின் நாவலர் என என்றும் போற்றி வணங்கப்படவேண்டியவர்.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்

THULIRGHAL
201/1, ... NUE,
3RD C... STREET,
JAFFNA.

# தகவல் வலைய ஒழுங்கமைப்பு

தகவல் வலையமென்பது நூலகங்கள், ஆவண நிலையங்கள், தகவல் நிலையங்கள்போன்ற முகவர் நிலையங்களை (**Agencies**) தொடர்பூடகங்களின் மூலம் ஒருங்கிணைக்கும் ஓரமைப்பாகும். இதன் நோக்கம் பொதுவானதொரு திட்டத்தைச் செயற்படுத்துவதாகும்.

ஒரு தகவல் வலையத்தில் பின்வரும் அம்சங்கள் அடங்கும்:

(1) ஒரு தொகை தகவல் முகவர் நிலையங்கள் (**Information Agencies**) இவை வலையத்தின் முனைகள் (**Nodal Points**) எனப்படும்.

(2) வலையத்தின் முனைகளை ஒருங்கிணைக்கும் தொடர்பூடகம் (**Communication Media**)

(3) பொதுவானதொரு செயற்திட்டம் (**Common Programme**)

மேற்கூறிய மூன்று அம்சங்களையும் விவரிப்பதன் மூலம் நாம் தகவல் வலையத்தின் தன்மையினை அறியலாம். ஒரு தகவல் வலையத்தின் செயற்றிறன். அதன் முனைகளின் பலத்திலும், தொடர்பூடகத்தின் திறனிலும், பொதுத் திட்டத்தின் பயன்பாட்டிலும் தான் தங்கியுள்ளது.

முதற்கண் தகவல் வலைய முனைகள் தெளிவாக இனங்காணப்பட வேண்டும். வலையத்தின் எல்லைக் கோடுகளை வரையறுப்பதன் மூலம் இம்முனைகளைத் தெரிவு செய்யலாம். ஒரு வலையத்தில் பின்வரும் எல்லைக்கோடுகளுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எல்லைக் கோடுகள் அடங்கக்கூடும்.

(அ) புவியியல் சார்ந்தவை (சர்வதேச, பிராந்திய, தேசிய மாகாண அடிப்படையிலானவை)

(ஆ) பொருள் சார்ந்தவை (அறிவியல், மருத்துவம், விவசாயம், தொழிற்றுறை அடிப்படையிலானவை)

(இ) நிறுவனங்கள் சார்ந்தவை. (அரசாங்கம், உள்ளூராட்சிமன்றம், பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அடிப்படையிலானவை)

தொடர்பாடலின் மூலமே தகவல் வலையத்தின் செயற்பாடு நிகழ்கிறது. வலைய முனைகளுக்கிடையிலான தொடர்பாடலுக்குச், செய்முறைகள், விதிகள், நியமங்கள், வழிகாட்டிகள் ஆகியன துணை போகின்றன.

ஒரு வலையத்தினுள் தகவலினதும், ஆவணங்களினதும், இடமாற்றத்திற்கும் பரிமாற்றத்திற்கும் தொடர்பாடல் அத்தியாவசியமாகும். அத்தொடர்பாடலின் திறமையான இயக்கத்தை பின்வரும் முறைகளினால் பெறக்கூடும்.

1. வலையத்தின் நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்கு ஒரு மத்திய முகவர் நிலையத்தை நிறுவுதல்

2.. கூட்டங்கள், செய்தித்தாள்கள் போன்ற தொடர்பாடல் ஊடகங்களை ஏற்படுத்தல்.



3. தொடர் பாடலுக்கான விதிமுறைகளைத் தொகுதல் (செய்முறைகள், வழிகாட்டிகள், நியமங்கள் குறிப்பேடுகள் போன்றவை)

பல வலையங்கள் தமது நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்துவதற்கான மத்திய முகவர் நிலையமொன்றினை ஏற்படுத்திக்கொள்வதில் அனுகூலம் காண்கின்றன. சிலவேளைகளில் ஆவண வளம்மிக்க வலைய முனையொன்று மத்திய முகவர் நிலையமாகத் தெரிவு செய்யப்படும். இம்மத்திய முகவர் நிலையம் அல்லது ஒரு முகப்படுத்தும் நிலையம் தகவல் வலையத்தின் காரியாலயமாகவும் (**Secretariat**) இயங்கும்.

ஓர் ஒருமுகப்படுத்தும் நிலையம் வலையத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதோடு கண்காணித்தலும் அவசியமாகும். மேலும் பொதுவான நோக்கங்களை அடைவதற்கு ஏதுவாக வழிகாட்டிகளையும், நியமங்களையும் தயாரித்து தகவல் முனைகள் அந்நோக்கங்களை செய்கின்றனவா என்பதையும் அவதானிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முகப்படுத்தும் நிலையமொன்றில்லாவிடத்து ஒரு தகவல் வலைய நடவடிக்கைகளை ஆற்றுப்படுத்தும் குழுவொன்றினால் **(Steering Committee)** கட்டுப்படுத்தக்கூடும். இக்குழுவில் சம்பந்தப்பட்ட வலைய முனைகளின் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிப்பர். காலம் தவறாது வலைய நடவடிக்கைகளை மீள்பார்வையிடவும், சீர்காணவும் இக்குழுவின் கூட்டங்கள் வழிவகுக்கும். இவ்வாறு பரவலாக்கப்பட்ட தகவல் வலயத்தின் பிரதிகூலங்களுள் ஒன்று குழுவின் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வலைய நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் தோற்றுவதாகும். இது தவிர இரு வலைய முனைகளுக்கிடையிலான தொடர்பாடலின் தன்மையும் திறனும் ஒரு சீராய் இல்லாமலிருக்கலாம். இவ்விதமான குறைபாடுகளைக் குழுவினர் உடனடியாக அவதானித்து நிவர்த்திக்க வேண்டும்.

ஒருமுகப்படுத்தும் நிலையமாக ஒரு வலைய முனையைத் தேர்ந்துகொள்ள முடியாத விடத்து ஆற்றுப்படுத்தும் குழுவொன்றினை அமைத்துக் கொள்வதே பொருத்தமான முறையாகும்.

தகவல் வலையத்தின் நோக்கங்களை அடைவதற்கு தொடர்பாடலுக்கான ஊடகங்களை ஒழுங்கமைப்பது அவசியமாகும். இதன் மூலமே தொடர்பாடலைப் பராமரித்து அபிவிருத்தி செய்யமுடியும்.

வலைய முனைகளின் பிரதிநிதிகள் கிரமமாகக் கூடுவதன் மூலம் வலையத்தின் நடவடிக்கைகளை மீள் பார்வையிடவும், தனிப்பட்ட வகையிலும் பொதுவாகவும், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யவும், செயற்றிட்டங்களை மாற்றியமைத்துக் கொள்ளவும் ஏதுவாயிருக்கும். இவ்வாறு செய்வதற்கு உதவும் வகையிலான அறிக்கைகளை வெளியிடும் முறையினையும் கையாள முடியும். வலைய முனைகளிலிருந்து அவற்றின் அபிவிருத்தி பற்றிய புள்ளி விபரங்களுடனான அறிக்கைகளைப் பெற்று அம்முனைகளின் பங்களிப்பை மதிப்பீடு செய்யவும் முடியும்.

**தகவல் வலையத்தின் நோக்கங்களை அடைவதற்கு தொடர்பாடலுக்கான ஊடகங்களை ஒழுங்கமைப்பது அவசியமாகும்.**

மேலும் காலத்துக்குக் காலம் கூட்டங்களை நடத்தி நேரடியாகவே விடயங்களை அறிந்து கொள்ளவும் முடியும். இவ்விதமான கூட்டங்கள் அறிக்கைகளை விடக்கூடியதான பயனளிக்கத் தக்கவையாகும். ஏனெனில் கூட்டங்களின் போது பொதுவான பிரச்சினைகளைப் பற்றிக் கலந்தாலோசிக்கவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், ஏதுவாயிருக்கும். இவ்வாறான வலையக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் தரப்படுத்தும் ஆவணங்களாகிவிடும். வலையக் கூட்டங்களை அடிக்கடி நடத்துவது மிகவும் கடினமான காரியமாயிருக்குமாதலின் வலையத்தின் நடவடிக்கைகளைப் பற்றி ஒரு செய்தித்தாள் மூலம் வலைய முனைகளுக்கு அறிவிக்க முடியும். இச்செய்தித் தாளில் வலைய முனைகள் பற்றிய செய்திகள், ஒருமுகப்படுத்தும் நிலையம் பற்றிய செய்திகள், மற்றும் வலையத்திற்குட்பட்ட தகவல் முகவர் நிலையங்கள் பற்றிய

**என்.யூ.யாபா**
**பிரதான நூலகர்**
**சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிலையம்**

செய்திகள் இடம்பெறக்கூடும். இச்செய்தித் தாளைப் பதிப்பிற்குத் தயார் செய்து வெளியிடுவதற்கு மிகவும் பொருத்தமான நிறுவனம் ஒருமுகப்படுத்தும் நிலையம் தான். சில வலையங்கள் செய்தித்தாளின் ஆசிரியப் பணியைச் சுற்று முறையில் அனுசரிக்கின்றன. இம்முறைப்படி ஒவ்வொரு வலைய முனையும் இப்பணிக்கான பொறுப்பைச் சுற்று முறையில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு தகவல் வலையம் பரந்த அளவினதாகவிருந்தால் அதனைப் பல உட்பிரிவுகளாக அமைத்துக் கொள்ளலாம். இவ்வுட் பிரிவுகள் தமக்கேயுரிய ஒரு முகப்படுத்தும் நிலையத்தினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்த நிலையங்க ர் மையமான **(Central)** ஒரு முகப்படுத்தும் நிலையத்தினோடு நேரடியாகத் தொடர்பாடலில் ஈடுபட வேண்டும். இந்த விதமான ஒரு தேசிய தகவல் வலையத்தினைப் பல மாகாண அல்லது மாவட்ட வலையங்களாக அமைத்துக் கொள்ளமுடியும்.

ஒரு பொருள் சார்ந்த வலய்யம். குறுகிய அளவிலான பொருள் சார்ந்த பல உட்பிரிவுகளைக் கொண்டதாக இருக்கக்கூடும். இத்தகைய தகவல் வலையம் மண்டல வலையம் **(Zonal network)** என்றழைக்கப்படும் ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்துவதற்கே ஒரு தகவல் வலையம் உண்டாக்கப்படுகிறது. அத்தகைய நிரலுடன் அல்லது வேலைத் திட்டத்தின் தகவல் முனைகள் தமது வளங்களைப் பகிர்ந்து கொள்வதும் பரிமாறிக் கொள்வதும் அவசியமாகும். அவ்வாறின்றேல் தகவல் முனைகளின் பங்களிப்பின் மூலமாகப் பொது வளங்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். தகவல் முனைகள் சம அளவிலான வளப்பங்களிப்பை வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு எல்லாத் தகவல் முனைகளும் போதிய வளத் தகைமை பெற்றிருந்தால் மட்டுமே சாத்தியமாகும்.

எனவே, வளங்குன்றிய தகவல் முனைகளை இனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும். வழக்கமாக ஒருமுகப்படுத்தப்படும் நிலையங்கள் வளங்குன்றிய தகவல் நிலையங்களின் நலன்கருதி அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களைச் செயற்படுத்தும். மேலும் ஒரு முகப்படுத்தும் நிலையம் தகவல் வலைய சேவையாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டங்களையும், கடைப்பிடிக்கும் மற்றும் ஆவணங்களையும் உபகரணங்களையும் வாங்குவதற்கான நிதியையும் திரட்டும்.

தகவல் வலையச் செயற்பாட்டின் மூலம் ஒரு தகவல் முனையின் வளங்கள் அவ் வலையத்திலுள்ள ஏனைய முனைகளுக்கும் கிட்டுவதாயிருக்கும். கோட்பாட்டளவில் ஒரு வலையத்திலுள்ள தகவல் முனையொன்று பெறக்கூடிய வளம் வலையத்திலுள்ள எல்லா முனைகளது வளங்களினதும் கூட்டாகவிருக்கும். இத்தகைய வளங்களின் சிறப்பான பயன்பாடு வளங்களின் இரட்டிப்பை (**Duplication**) தவிர்ப்பதன் மூலம் பெறக்கூடியதாயிருக்கும்.

ஒரு தகவல் வலையம் கட்டளையின் மீது அல்லது தன்னிச்சையாக உருவாக்கப்பட்டு இயக்கப்படலாம். வலையத்தின் தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு வலையத்தின் தகவல் முனைகள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியிருக்கும். வலையச் செயற்பாட்டில் தன்னிச்சையாகக் கலந்து கொள்வதும் பயன் மிக்க தாயிருக்கும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் தொலைபேசித் தொடர்புகளும், கணனி நுட்பங்களும் தகவல் வலையச் செயற்பாட்டில் கையாளப்படுகின்றன.

சர்வதேச, பிரதேச, தேசிய தகவல் வலையங்களால் கையாளப்படும் வலைய நடவடிக்கைகளுள் சில பின்வருவனவாகும்.

(அ) நூற்சேர்க்கை நியதிப்படி அமைந்ததொரு திட்டத்தின் கீழ் வலைய முனைகள் ஆவணங்களைச் சேகரித்தல்.

(ஆ) இரவல் வழங்கல், நூல்கள் பருவ வெளியீடுகள், நியமங்கள் முதலியவற்றை இரவல் வழங்கல்.

(இ) மத்திய நூற்பட்டியல் நூல்களுக்கும், பருவ வெளியீடுகளுக்குமான மத்திய நூற்பட்டியலொன்றைத் தொகுத்தல். ஒவ்வொரு வலைய முனையும் தான் சேகரிக்கும் நூற்தொகை பற்றி மத்திய முகவர் நிலையத்திற்கு அறிவித்தல்.

(ஈ) சுட்டிகள், தகவல் வலைய முனைகளின் பங்களிப்புடன் கூடிய மத்திய சுட்டியொன்றை மத்திய முகவர் நிலையம் தொகுத்தல். இதுபோன்ற சுட்டியைப் பல சர்வதேச தகவல் வலையங்கள் தொகுத்துக் கொள்கின்றன.

(உ) நிகழ்காலம் சார் அறிவூட்டல் (**Current Awareness**) தகவல் வலையப் பாவனையாளர்களின் உபயோகத்திற்காக நிகழ்கால நிகழ்ச்சிகள் பற்றிய அறிவூட்டலுக்கான செய்தித்தாள்களை தகவல் வலைய முனைகள் கூட்டாகத் தயாரித்து வெளியிடுதல்.

(ஊ) பரிமாற்றம்: வெளியீடுகள், இரட்டிப்புப் பிரதிகள், கட்டுரைகளின் புகைப்படப் பிரதிகள், பருவ வெளியீடுகளின் பொருளடக்கப்பக்கத்தின் புகைப்படப் பிரதிகள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ளல்.

(எ) உசாத்துணைச் சேவை தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொருள் பற்றிய தகவல் சேவையை வலைய முனை வழங்குதல். வலைய பாவனையாளர்களின் வேண்டுகோளைச் சம்பந்தப்பட்ட வலைய முனைக்கு ஒருமுகப்படுத்தும் நிலையம் தொடர்புறுதல்.

தகவல் முகவர் நிலையங்கள் தமது பாவனையாளர்களின் பெரும்பான்மையான தகவல் தேவைகளைத் தமது சுய வளங்களை மாத்திரம் கொண்டு பூர்த்தி செய்வது சாத்தியமான காரியமல்லவென்பதை உணர்ந்து தகவல் வலையங்களை அமைத்துக் கொண்டுள்ளன.

இ.லங்கையிலுள்ள விஞ்ஞானத்துறை சார்ந்த நூலகங்கள் இலங்கை விஞ்ஞான தொழில்நுட்பத் தகவல் வலையம் (**SLSTINET**) என்ற பெயரில் ஒரு தகவல் வலையத்தை ஒழுங்கமைத்துக் கொண்டுள்ளன. இவற்றை ஒரு முகப்படுத்தும் நிலையமாக இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்பத் தகவல் நிலையம் (**SLSTIC**) இயங்குகிறது.

இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்பத் தகவல் வலையத்தின் (**SLSTINET**) அமைப்புக்குள் பொருள் அடிப்படையில் மூன்று உப பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன, விவசாயம் (**AGRI NET**) (விவசாயத் தகவல் வலையம்) சுகாதார விஞ்ஞானம் (**HELLIS**) (சுகாதார விஞ்ஞான நூலக வலையம்) மற்றும் புதுப்பிக்கக் கூடிய சக்தி-**RERINET** (புதுப் பிக்கக் கூடிய சக்தி வளங்களின் தகவல் வலையம்) என்பனவாகும்.

THULIRGHAL
201/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.

**கலைச்சொற்கள்**

தகவல் வலையம் - **Information net work**
முகவர் நிலையம் - **Agencies**
ஆவண நிலையங்கள் - **Documentation Centres**
தொடர்பூடகங்கள் - **Communication media**
தகவல் வலைய முனைகள் - **nodal points**
ஆற்றுப்படுத்தும் குழு - **Steering Commitee**
சுட்டிகள் - **Indexes**
நிகழ்காலம் சார் அறிவூட்டல் - **Current Awareness**
மத்திய நூற்பட்டியல் - **Union Catalogue**
உசாத்துணை நுட்பங்கள் - **Referral Service**
கணினி நுட்பங்கள் - **Computer Technologies**
மண்டலத் தகவல் வலையம் - **Zonal network**

**தமிழாக்கம் :**
**எஸ்.எம்.கமால்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை



ாலிந்த முகமும், நல்லெண்ணம் செறிந்தொளிரும்
மரர் க.வை.தனேஸ்வரன் அவர்களின் சிறந்த
ா முன்னோக்கி உந்தும் முயற்சியின் தோற்றங்க
ர் வாழ்ந்தார்.

லைகள், ஆலயங்கள், சமூக சேவை நிலையங்
கள் அனைத் தினிலும் ஆங்கிலமும் செந்தமிழும்
மொழிகுலையாச் சுவை பரவ ஒலி பெருக்கும்
அவரின் கம்பீர வார்த்தைகள் என்றும் மறக்கப்பட
முடியாதவை.

இயற்கையை இரசிக்கும் இனிய பண்பும், மற்றையோர்க்கு உதவி மகிழ்வுறும் சிந்தையும் அவருடையதாக: ஆசிரியராய், உடற்கல்வியாள ராய், எழுத்தாளராய், பேச்சாளராய், அறிவிப்பாளராய், நாடகவியலாள ராய்த் திகழ்ந்தார் அமரர் க.வை.தனேஸ்வரன் அவர்கள்.

விளக்கு தாளிகையின் தொடக்ககால ஆசிரியர் குழுவிலோர் ஆலோசகராய் ஆற்றல் மிகு எழுத்தாளராய் இருந்தவர்.

அவரது உடலைக் குமுறி எழுந்த ஆழிப்பேரலை தன் கொடிய நாவுக்குள் ஈர்த்தாலும், அவர் கொடுத்துச் சென்ற நல்லறிவால் தம்புகழை உலகறிய நிறுத்திக் களிக்கும் உலகோர் பெருமைக்குள் அமரரைக் காணுகின்றோம். அவரின் ஆத்ம சாந்திக்காய் அஞ்சலி செய்கின்றோம்.

பேச்சாற்றல் விருத்திக்கு அவரின் 'பேச்சுக்கலையின் விந்தை' எனும் கட்டுரையிலிருந்து உரைத்தேனின் ஒரு பகுதியை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

– ஆசிரியர்.

# பேச்சுக்கலையின் விந்தை

மனிதனுக்குப் பலவகைச் செல் வங்கள் சேரலாம். அறிவுச் செல்வம், மழலைச்செல்வம், பதவிச்செல்வம், பொருட்செல்வம் என்று விதம் விதமான செல்வங்கள் இருக்கலாம். இவை பட்டியலிட்டுக் கூறக்கூடி யவை. ஆனால் சொல்லாற் றல் என்ற செல்வம் ஏனைய செல்வங்களில் அடங்காது. சொல்வளம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அதற்கு ஈடு இணை கிடையாது. நாவினால் ஏற்படும் செல்வத்தை திருவள்ளுவர் நாநலம் என்று பாராட்டுகின்றார். கம்பர் சொல்லின் செல்வம் என்று நாநலத்தின் விளைவுகளைச் சிறப்பிக்கின்றார்.

எடுத்த விடையத்தைத் தொடுத்து உணர்ச்சியோடு எடுப்பாகச் சொல்லுதல் முதற்படி. நகைச்சுவை இழையோடச் சுவையான கதைகளைச் சொல்லிக்கேட்போர் இதயத்துக்குக் களிப்பூட்டுதல், நாட்டுப்பற்றை, பொழிப்பற்றை, மதத்தை, ஆணவத்தைக் கிளறி விட்டு மக்களைத் தம் வசப்படுத்துதல், ஆட்சி மன்றில் அல்லது நீதிமன்றில் உரை நிகழ்த்துவோர் அடைமழைபோலக் குற்றங் களை மாற்றார்மேல் பொழிந்து திக்கு முக்காட வைத்தல். இவர்கள் எடுத்தாளும் சொற்றொடர்கள் சவுக்கடிபோலச் சுளீரென்று மாற்றுக்கருத்துடையோரைத் தாக்கும். பேச்சுக் கலையின் விந்தை இது. அரசியலாளர்கள் களிமண்ணைக் கொண்டு பானை வனைவது போல் ஆயிரக்கணக்கான மக்களின் மனங்களை தமது விருப்புக்கேற்ற வசப்படுத்தி ஆட்சி அதிகாரத்தைத் தமக்காக்கப் பேச்சுக் கலையை ஆயுதமாகக் கொள்வர்.

வித்துவான் வேந்தனார் பேசும் போது அவரது தனித்தமிழ் மூச்சையும், ஆவேசத்தையும், உணர்ச்சியின் சூறாவளியையும், இலக்கிய நயத்தையும் அனுபவிக்கலாம். தேவன் யாழ்ப்பாணம் வழக்காடு மன்றங்களில் தொகுப்புரை வழங்குகையில் கையாளும் வார்த்தைஜாலம் மிக நேர்த்தியாக அமையும். அவரின் தீர்ப்பு தேவனின் தீர்ப்பு என்று ஊடகங்கள் விதந்துரைக்கும். கம்பவாரிதியின் உரையிலே உண்மை, தர்க்கம், ஆர்வம், அமைதி, நகைச்சுவை, கதை, மறைமுகமான நிந்தனை என்பன மிதந்துவரும். பேசும் போது குரல்வளை நர்த்தனம் புரிகின்றது. குரலைத் தேவைக்கேற்ப ஏற்றியும், தாழ்த்தியும் கருத்தை வெளிப்படுத்துவது வித்துவான் வேலனின் பாணி. கவிதைக் காட்சிகள் இனிக்கப் பாடப்பட்டு, இதயங்கள் திருடப்படும். பேச்சு மனத்திரையில் படக்காட்சியாகி விடுகின்றது. இவர்களது உரையரங்கில்.

பேச்சாற்றலால் கிடைக்கும் புகழ் இமயம் போன்றது. மதிப்பிட முடியதது. எனவேதான் திருக்குறள் இவ்வாறு பேசுகின்றது.

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று

2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருமான் பேச்சாற்றாலை நாநலம் என்று சூட்டியமை மனங்கொள்ளத் தக்கது.

நல்ல பேச்சாளர் பேச வேண்டாத நேரத்தில் நாவடக்கத் தெரிந்தவர்கள். மேடையைக் கண்டுவிட்டால் கால அளவு தெரியாமல் உளறுபவன் அசடு. மாசற்ற சில சொல் பேசுவது நாவடக்கம். நாவடக்கத்தைச் சுலபமாகப் பெற்றுவிட முடியாது. நாவினால் பேசப் பழகுவதற்கு ஒரு குழந்தைக்கு ஆண்டுகள்

THULIRGHAL
201/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு போதும். ஆனால் நாவை அடக்கிப்பழக அறுபது ஆண்டுகள் போதவில்லை என்கிறார் ருசிய அறிஞர் ஒருவர். நாடவக்கத்துக்கு மிகுந்த பயிற்சி வேண்டும். சபையின் நாடியறிந்து பேசுவோர் பாராட்டுப் பெறுவர் என்பதில் ஐய மில்லை.

மாசற்ற காட்சியுடையவர்களே இலக்கிய இன்பத்தை அவைக்கு அளிக்கும் வல்லமை பெற்று விளங்குவர். சொல்லின் செல்வர் இரா.சேதுப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, இரசிகமணி கனக.செந்திநாதன் போன்றோரின் உரை கேட்டார் பிணிக்கும் தகையது. கேளாரும் வேட்ப அமைந்து விடும். சபை படித்தவர்களை மட்டும் கொண்டிருப்ப தில்லை. பாமரரும் சேர்ந்திருப்பர். ஆடவர், மாதர், பிள்ளைகள் என்று பலதரப்பட்டவர்கள் மண்டபத்தில் நிறைந்திருப்பர். இவர்களின் மனங்களை ஈர்த்துக் கேட்போரைப் பரவசப்படுத்தி இன்னும் பேசமாட்டாரா இவர் என்ற உணர்வு மேலிடப் பேச்சை நிறைவு செய்ய வல்லவர்கள் சொல்வளம் நிறைந்த சொற்பொழிவாளர் கள்.

சொல்லாற்றல் மிக்கவர்கள் புதிய சொற்களைச் சேர்த்துக் கொள்வதோடு பழைய சொற்களுக்கு புதுமையும், புத்தாற்றலும் கொடுக்கின்றார்கள். மேடைப்பேச்சாளர்கள் சொல்லை மிகுந்த கவனத்தோடு பயின்றவர்கள். சொல்லோடு நெருங்கிப் பழகுதல், மற்றவர் மனதைக் கவர சொல்லினால் தவம் செய்தல், பலகற்றுத் தெளிதல் என்பன பேச்சாளர்களை மேம்படுத்துகின்றன.

செவிவழியாக வரும் கருத்துக்கள் நமது உள்ளத்தைச் சுண்டியிழுக்க உரையாற்றுவோர் சொல்லுக்குள்ளே போதை யூட்ட வல்லவர்கள். எடுத்தாளும் செய்தியின் பொருள் உணர்ந்து அதற்கொரு சொற்கோலம் கொடுக்கும் சக்திபெற்ற சொல்லேருழ வரின் சிந்தனைக் குவியல்கள் கேட்போர் உள்ளத்திலே பாய்ந்து உணர்ச்சியைப் பக்குவப்படுத்துகின்றது.

வாழ்க்கை - ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டது. நியதிக்குக் கட்டுப்பட்டது. பொருள் பொதிந்தது. அர்த்தமுள்ளது என்ற உயர்ந்த தத்துவத்தை தமது ஆத்மீகச் சொற்பொழிவால் நிறுவியவர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள். நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப் பிரசங்கங்களும் சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகளும் துர்க்கா துரந்தரி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் அருளுரைகளும் அவை மார்க்கத்தின் பூரணத்துவத்தின் வடிவங்கள். தேன்சிந் தும் கவிக்காட்சி விருந்துகளைப் பன்மொழிப் புலவர், பண்டிதர் க.சச்சிதானந்தன் படைக்கும்போது படித்தோர் நெஞ்சம் புழகாங்கி தமடையும்.

அரிய கருத்துக்களை ஒழுங்குபடுத்தி இனிமையாகச் சொல்ல வல்லாரை உலகம் என்றும் ஏற்றிப் போற்றும்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

- திருவள்ளுவர்.

கலாநிதி. வை.அருள்நந்தி.
கிழக்கு பல்கலைக்கழகம்.

## சில சிந்தனைகள்

ஊட்டச்சத்து மிக்க நுண்ணங்கிகள் கொண்ட மரக்கறிகளே எதிர்காலத்தின் ஒரு சிறந்த தேர்வாகும். இதன் விளைவாக உயர்தர தொழில்நுட்பங்களைக் கொண்டு மரக்கறியில் ஊட்டச் சத்துப் பெறுமானம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

தற்போது ஒன்றை விட மற்றது சிறப்பு வாய்ந்தது என்ற நிலை காணப்படுகிறது. ஆனால் வரும் காலத்தில் சுற்றாடலுக்கு இசைந்த வகையில் ஒன்றில் மற்றது தங்கியிருக்கும் வகையில் அதாவது தாவரங்கள், மனிதர்கள் விலங்குகள் அனைத்தும் ஒன்றாகக் கணிக்கப்பட்டு மரக்கறிகள் விளைக்கப்படல் வேண்டும். வளமாக்கிகள், பீடை நாசினிகளின் அபரிமிதமான பாவனை பல சமூகங்களில் உள்ள நுகர்வோர்கள் மரக்கறிகளைப் பாவிப்பதில் எதிரான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வகையான அளவிற்கு அதிகமான பாவனை சரிபடுத்தப்படல் வேண்டும். நீண்டகால நோக்குடைய மரக்கறி உற்பத்திகளின் விரிவாக்கல்கள் புதிய தொழில் நுட்பங்களில் மாத்திரம் தங்கியிராமல், தேசிய மட்டத்தில் ஏற்படுத்தப்படும் சாதகமான கொள்கை திட்டங்களிலும் தங்கியுள்ளது. உடல் நலத்தைக் கொடுப்பதிலும், ஊட்டச்சத்தை வழங்குவதிலு மான மரக்கறியின் பங்கு மேலும் மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, கூடியளவு நுகர்வுக்குட்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளுதலை ஒரு முக்கிய அம்சமாக கருத்திற் கொள்ள வேண்டும்.

'வேளாண்மைக்கல்விக்கு ஒரு விவரணம்' என்னும் நூலிலிருந்து-
இதழாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THULIRGHAL
11/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA

கவிதை

# மெய்யறியக் கேளுங்கள்!

**கேள்வி: திருமதி.ஸ்ரீதேவி சண்முகதாசன்**
**யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்**

**ஆசிரியர் நிலையங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டு வருகின்றன. அவற்றின் தேவை பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் அறிய விரும்புகின்றேன். விபரமான விளக்கம் தாருங்கள்.**

**பதில்: கல்வி 2001 பெப்ரவரி - ஏப்ரல் நூலிலிருந்து**
**கலாநிதி ஐ.எஸ்.கினிகே,**
**உதவிப் பணிப்பாளர் நாயகம்,**
**(தொழில்சார் அபிவிருத்தி)**

## ஆசிரியர் கல்வி நிலையகளினூடாக இடையறாத ஆசிரியர் கல்வி

ஆசிரியர்களின் நான்கு வகையான தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் தொடர் ஆசிரியர் கல்விப் பாடநெறிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நினைவில் இருந்து நீங்கிய அறிவு, திறன்கள் பற்றிய ஞாபகத்தைப் புதுப்பித்து ஆசிரியர்களுக்கு புத்துணர்வூட்டு வதே முதலாம் வகைத் தேவையாகும். காலவோட்டத்துடன் அறிவு நாட்பட்டு விடுகின்றமையை நாம் அறி வோம். எனவே அறிவை இடையறாது பெற்று தற்காலப்படுத்த வேண்டியது அவசியமாகும். இத் தேவையை நோக்காகக் கொண்டு இரண்டாம் வகைப் பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத் துறையிலும் சேரும் புத்தறிவு தொடர்பான விழிப்பை ஆசிரியர்களிடத்தே ஏற்படுத்தி அவர்களது அறிவையும் திறன்களையும் மேம்படுத்தும் நோக்குடன் மூன்றாம் வகைப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. கல்வித் தொகுதியில் ஏற்படும் மாற்றங்களுக்கு இசைவடையக் கூடியவாறாக ஆசிரியர்களை மாற்றியமைக்கும் நோக்குடன் நான்காம் வகைப் பாடநெறி உருவாக்கப் பட்டுள்ளது. இதற்காக ஆசிரியர்கட்கு மீள்பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படும். தாம் ஏற்கனவே பயின்று பயிற்சி பெற்றுள்ள விடயத்தைவிடுத்துப் பிறிதொரு பாடத்தில் பயிற்சி பெற்று புதியதொரு வழியில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். இதுவரையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப்பாட நெறிகள் யாவும் ஆசிரியரை ஒரு குறித்த துறையிலே பயிற்றுவிப்பன வாகவே அமைந்தன. ஆசிரியர்களைக் குறித்தொதுக்குதல் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் இதன் விளைவாக உருவாயின. எனவே, புதிய கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகட்கு அமைய, ஆசிரியர்களுக்கு இரண்டு பாடத்துறையில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

மேற்படி நான்கு வகையான பாடநெறிகளையும் நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள புதிய வேலைத்திட்டமே, ஆசிரியர் தொடர்கல்வித் திட்டமாகும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள புதிய அமைப்புக்களுள் ஆசிரியர் மையங்களும் **(Teacher Centers)** ஆசிரியர் கல்வி நிறுவனங்களும் **(Teacher Education Institutes)** முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஏற்கனவே நாடளாவிய ரீதியில் ஆசிரியர் மையங்கள் தாபிக்கப் பட்டுள்ளன. இவற்றில் ஆசிரியர்களுக்காக வதிவிட வசதிகளின்றி ஒரு நாள் அல்லது இருநாள் பாடநெறிகளை நடத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான கலைத்திட்ட ஆவணத் தயாரிப்பு, விரிவுரையாளர் பயிற்சி ஆகிய பணிகள் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்த நிறுவனங்கள் ஆகிய தேசிய கல்விக் கல்லூரிகளை மையமாகக் கொண்டு அவை நிறுவப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. வலயக் கல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் செயற்படும் வலய தொழில்சார் அபிவிருத்திச் சபைகள் மூலம் இந்நிலையங்களின் பணிகள் இணைப்புச் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஒவ்வோர் ஆசிரியர் மையத்துக்கும் குறைந்த பட்சம் முகாமையாளர் ஒருவரையும் அவருக்குத் துணையாக மேலும் மூவரையும் நியமிக்க வேண்டும் எனும் தேவை உணரப்பட்டுள்ளது. இவ்வாறு பொருத்தமானோரை **ஆசிரியர் கல்வியாளர்** சேவையைச் சேர்ந்தோரிலிருந்து தெரிவு செய்து நியமிக்கும் பொறுப்பைக் கல்வி அமைச்சு ஏற்றுள்ளது.

விடுதி வசதிகளின்றி, குறுகிய கால ஆசிரியர் கல்வி வேலைத் திட்டங்களை இந்நிலையங்களினூடாக நடத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்ட நாட்கள் வரை நீடிக்கும் ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தும் பொறுப்பு ஆசிரியர் கல்வி நிலையங்களைச் சார்ந்ததாகும். மாகாண மட்டத்தில் மிகையாகக் காணப்படும். கல்விக் கல்லூரிகள் சிலவும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் சிலவும் இதற்காக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன. இது வரை காலமும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புகள் குறித்த ஆட்தெரிவுக் கொள்கைக்கு அமைய முற்றுப்பெற்றதன் பின்னர் அவ்வாசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை இப்பணிக்காகப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தேசிய கல்வி நிறுவகத்தினால் பிரதேச ரீதியில் பெருந்தொகையான ஆசிரியர் நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பொதுவாக நிர்வாக மாவட்டங்களின் பிரதான நகரங்களில் அமைந்துள்ள இந்நிலையங்கள் பல வகைப்படும். பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா நிலையங்கள், கல்விமாணிப் பட்டப்படிப்பு நிலையங்கள், ஆசிரியர் தொழிற்கல்வி நிலையங்கள், மேலதிக மொழிவிருத்தி நிலையங்கள், கணனி வள நிலையங்கள், பிரதேச ஆங்கில மொழித்துணை நிலையங்கள், சேவைக்கால ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் என்பனவே அவையாகும். நாடெங்கிலும் இவ்வாறான ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட நிலையங்கள் உள்ளன. இந்நிறுவனங்களுக்கும் புதிய எண்ணக் கருவின் கீழ்த்தாபிக்கப்பட்டுள்ள ஆசிரியர் மையங்களுக்கும் இடையில் ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாயின், அது ஆசிரியர் கல்வி வலையமைப்பை பிரதான நகரங்களை மையமாகக் கொண்டு வலிமைப் படுத்திக் கொள்ளப் பெரிதும் துணையாக அமையும். வினைத்திறன் தொடர்பாகத் தற்போது தோன்றியுள்ள பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் தூரப் பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரிய ஆசிரியைகளுக்கு புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்தி பயனுறுதியுடைய கற்றல் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் இது வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் மையங்களினூடாகப் பலபணிகள் ஆற்றப் படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியரது தேவைகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது அவற்றுள் முக்கியமானதாகும். வினாக் கொத்துக்களை வழங்கி, வலய மட்டத்தில் ஆசிரியர்களது தேவைகளை மதிப்பிடுவதற்கான முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளபட்டுள்ளன. எனினும், ஆசிரியர்களின் உண்மையான பிரச்சினைகளை இம்முறையில் இனங்காண்பது கடினமானது என்பது ஆராய்ச்சி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியருடன் கலந்துரையாடியவாறு, அவர்களுடன் உரையாடியும் அவர்கள் செயற்படும் விதத்தை நுணுகி அவதானித்தும் அவர்களது உண்மையான கல்வித் தேவைகளை மதிப்பிடும் பணியில் ஈடுபட ஆசிரியர் மையங்கள் முன்வருதல் வேண்டும்.

இவ்வாறாக ஆசிரியர் மையங்கள் இனங்காணும் தேவைகள், விடயஞ் சார்ந்தவை, தொழில் சார்ந்தவை என இருவகைப்படும். மிக பொருத்தமானவாறு தொடர் கல்வி வேலைத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கு இவ்வகைப்பாடு பெரிதும் உதவும். வலய மட்டத்தில் தொழில்சார் அபிவிருத்தித் தேவைகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மாகாண மட்ட தொழில்சார் அபிவிருத்தித் தேவைகளையும் அவற்றை மேலும் பகுத்தாய்வதன் மூலம் தேசிய மட்டத் தேவைகளையும் இனங்காணலாம். தேசிய மட்டத்தில் புதிய கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள், ஆசிரியரின் ஆராய்ச்சிச் செயற்பங்கு போன்ற தலைப்புகள் முன்னுரிமை பெறுகின்றமையைக் காண முடிகின்றது. சிறிய பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் பல்-தரக் கற்பித்தலே முன்னுரிமை பெறும் நிலையில் உள்ளது.

தொழில்சார் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தவிர்ந்தவிடத்து பல உதவிச் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் ஆசிரியர் மையங்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒருமுகப்பட்ட வகையில் தயாரிக்கப்படும் கலைத்திட்டத்தை, வலய நிலைமைகட்கும் பொருத்தமானவாறு இசைவுபடுத்திக் கொள்ளல், வகுப்பறைக்குத் தேவையான கட்புல-செவிப்புல சாதனங்களைத் தயாரித்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கி வகுப்பறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை வழங்குதல் போன்றவை இவற்றுள் முக்கியமானவையாகும். பாடசாலை நேரத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் தவிர்ந்தவிடத்து சகபாடிகளுடன் சேர்ந்து ஓய்வு நேரத்தைப் பயனுறுதியுடைய வகையில் கழிப்பதற்கும் சமூகத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் இம்மையங்கள் ஆசிரியர்கட்கு உதவுதல் வேண்டும்.

ஆசிரியர் மையங்களால் நடத்தப்படும் வேலைத் திட்டங்களில் ஆசிரியர்கள் பங்குபற்றும் அளவிலேயே அவற்றின் வெற்றி தங்கியிருக்கும். எனவே, ஆசிரியர் மையங்களின் பணிகள் தொடர்பாக வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களிடத்தே விழிப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். ஆசிரியர் மையம் தொடர்பான தகவல்களையுள்ளடக்கிய சிற்றேடுகளை விநியோகித்தல், பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் மையப் பிரதிநிதிகளை நியமித்தல் அவர்களின் உதவியை இடையறாது பெறல் போன்ற வழிகளை இதற்காகக் கையாள முடியும். பல செயற்பாடுகளை ஆற்றக்கூடிய வகையில் இந்நிலையங்களின் முகாமையை வலுப்படுத்தல், இன்றியமையாததாகும். ஆசிரிய நிலையங்களை ஒரு முகப்படுத்தல், மையத்தின் குறிக்கோள்களை அடையக்கூடியவாறாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் மையக் கட்டட வசதிகளை விசாலித்தல், ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியே விநியோகிக்கும் வசதியற்றதும், அதிகவிலையுடையதுமான சிறப்பான உபகரணங்களை ஆசிரியரின் பயன்பாட்டுக்காக ஆசிரியர் மையங்களுக்கு வழங்குதல், கல்வி சார்ந்த மற்றும் நிருவாகம் சார்ந்த அறிவையும், ஆற்றல்களையும் கொண்ட தகுதிமிக்க பணியணியினரை மிகக் கவனத்துடன் தெரிவு செய்தல் ஆகியவற்றினூடாக வலயத்தின் ஆசிரியர் கல்விப் பணிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆசிரியர் மையங்கள் மேற்கொள்ளலாம். ஆசிரியரது தொழில் சார்ந்த அபிவிருத்திக்கு மாத்திரம் வரையறைப்படுத்துவதைத் தவிர்ந்த அதனைப் பல்பணி மையமாக விருத்தி செய்வதில் கவனஞ் செலுத்த முடியுமாயின், ஆசிரியர்கள் எனும் ஒளிவிளக்குகளை அணையாது தொடர்ந்து பிரகாசிக்கச் செய்யும் பணியைத் தேசிய மட்ட நிறுவகங்கள் செவ்வனே நிறைவேற்ற வழிபிறக்கும் என்பதில் ஐயமில்லை.

# சமுதாய ஒற்றுமைக்கு வித்திடும் சக்தி

பாடசாலை என்பது வீட்டுக்கும் சமூகத்துக்கும் இடையே இடப்பட்ட ஒரு பாலம் போன்றது. வீட்டில் இருந்து புறப்படும் மாணவன் பாடசாலை என்னும் பாலத்தினூடாகச் சமூகத்திற் பிரவேசிக்கிறான். அம் மாணவனைச் சிறந்த ஓர் அங்கத்தவனாகச் சமூகம் வரவேற்க வேண்டும். அதற்கு வழிவகுப்பது பாடசாலையாகும். எனவேதான் பாடசாலை வாழ்க்கை, மாணவரின் பொற்காலம் என வர்ணிக்கப் படுகிறது. இன்றைய மாணவரே நாட்டின் நாளைய பிரஜைகளாவர்.

பாடசாலையிற் புகும் மாணவரிடத்தில் பல்வேறுபட்ட ஆர்வங்களும், ஆற்றல்களும் அடங்கியுள்ளன. அவற்றைத் தூண்டி, அவர்களின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதே ஆசிரியரது கடமை. அதற்காகவே பாடசாலைகளிற் பல்வேறுப்பட்ட வேலைத்திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. ஒரு சில பாடப்புத்தகங்களைப் படிப்பதோடும் சில பரீட்சைகளிற் சித்தி பெறுவதோடும் மட்டும் மாணவரின் பாடசாலை வாழ்க்கை முடிவடையுமானால் கல்வியின் நோக்கத்தின் உண்மைப் பயனை மாணவர் பெற்றவர் ஆகார்.

ஒருவனது இயற்கை ஆற்றல்கள் தூண்டப்பட்டு, அவை பிரகாசம் அடையும்போதுதான் அவன் பூரண மனிதனாக மதிக்கப்படுவான். அத்துறையில் மாணவருக்கு உதவி புரிவனவே கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், பல்வேறுப்பட்ட கற்றற்தேர்ச்சிகள் என்பன.

ஒவ்வொரு சமூகத்திற்கும் எனத் தனித்துவம் வாய்ந்த கலை, கலாசாரம் என்பன உள்ளன. அவை அவ்வச் சமூகத்தின் பாரம்பரியச் சொத்துக்கள், ஒரு சமூகத்தின் உரைகல்லாகக் கூட மதிக்கத்தக்கன. அவற்றைப் பேணிப் பாதுகாத்தல் ஒவ்வொரு சமூக அங்கத்தவரதும் தலையாய கடமையாகும்.

மாணவரிடத்தில் அடங்கியிருக்கும் விசேட ஆற்றல்கள் எவை என்பதை முதலிற் கண்டுபிடிக்க வேண்டும். அவற்றை வளப்படுத்துவதற்கான வாய்ப் பைப் பாடசாலைகள் வழங்கவேண்டும். மின்மினிப் பூச்சியிடத்து ஒளிதரும் வஸ்துஒன்று உண்டு. பூச்சி இயங்கும் போதுதான் அவ்வஸ்தும் பிரகாசிக்கிறது. மற்றைய வேளைகளில் அதுபிரகாசிப்பதில்லை. அதுபோல மாணவரது இயற்கை ஆற்றல்கள் தொழிற்படும் போதுதான் அவர்கள் பிரகாசமடை வார்கள்.

கலை நிகழ்ச்சிகள் சாதி, சமய, சமூக வேறுபாடுகள் அனைத்தையும் கடந்த சமரச நிலை வாய்ந்தவை. ரசஞான விருத்தி உள்ளோர் நுண்கலைகளைக் குறுகிய நோக்கோடு பார்ப்பதில்லை. எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவையானாலும் பாராட்டுக்குரியவற்றைப் பாராட்டவே செய்வர். எனவே வேற்றுமைகளை விடுத்து, மனிதனை ஒன்றுபடுத்தும் சக்தி கலைக்குண்டு. ஒரு நாட்டிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையே உள்ள பிளவுகளைக் களைந் தெறிந்து அச்சசமூகத்தினரை ஒன்றுப்படுத்தும் கருவி யாகக் கலை நிகழ்ச்சிகளைப் பயன்படுத்த வேண்டும். எச்சமூகத்தைச் சேர்ந்தவையானாலும் கலைகளைத் தேசியச் சொத்தாகக் கருதி அரசாங்கம் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

இத்தகைய கலைகள் மூலம் ஒருசில பரிசில்களும் பாராட்டுக்களும் பெறுவதோடு மட்டும் நாம் இருந்துவிடுவோமானால் நுண்கலைகளின் உண்மைப் பயனை நாம் பெற்ற வர்கள் ஆகமாட்டோம். கலைகள் மனிதனுடைய ரசஞான விருத்தியை வளப்படுத்தவேண்டும். அதன் மூலம் அவன் பண்பட்ட மனப்பாங்குடையவனாக மாறவேண்டும்.

கல்வியிலும் மாணவர் பாட வகையிற் காட்டும் அதே அக்கறை வெளி முயற்சிகளிலும் காட்டவேண்டும். பாடசாலையிற் பயின்ற ஒரு மாணவன் தனது நாளாந்த வாழ்க்கைக்கு உறுதுணையான ஏதாவதொரு தொழிலைச் செய்யும் ஆற்றல் பெற்றவனாக இருக்கவேண்டும். வேலை தேடித் திரியும் கூட்டம் ஒன்றை உருவாக்குவதுதான் பாடசாலையின் பயனாக முடிந்தால், உண்மையில் அது ஒரு நாட்டின் துர்அதிஷ்டம் என்றே கூற வேண்டும்.

தமது ஆற்றலை வெளிப்படுத்தி ஏதாவது ஒரு தொழில் வாய்ப்பைப் பெறவேண்டும். தமது ஆற்றலின் அத்தாட்சியாகப் பல்வேறு தராதரப் பத்திரங்களைப் பாடசாலை வாழ்க்கையில் தேடிக்கொள்ள முயலவேண்டும். மற்றையோரிலும் பார்க்க தான் ஏதோ ஒரு வகையிற் சிறந்தவர் என்பதை நிரூபித்து, அதற்கான தராதரபத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு வெளி முயற்சிகளையும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இந்நிலையில் பல்துறை விழாக்களும் தலையாய இடம் வகிப்பன எனக் கூறுதல் மிகையாகாது.

முன்னாள்அமரர் க.குகதாசன் (வட்டாரக்கல்வி அதிகாரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தோம் வாசிப்போம்

சிறுகதை

THULIRGHAL
201/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.



# வயல்வெளிக்கு தீ மூட்டிய விவசாயி

**மதினுட்பமிக்க வயோதிபர்**

பல வருடங்களுக்கு முன்னர் யப்பானில் ஹமகுச்சி எனும் விவசாயி வாழ்ந்து வந்தார். வயோதிபரான அவர் மதினுட்பம் மிக்கவர். அவரது புத்திக்கூர்மையை கிராம மக்கள் யாவரும் மதித்தனர். ஒரு நிலச் சொந்தக்காரரான அவரது பாரிய விவசாயப் பண்ணை கடற்கரையையண்டிய மேட்டு நிலப்பகுதியில் வியாபித்திருந்தது. அப்பகுதி மக்கள் பண்ணையைச் சூழ மேட்டுநிலப்பகுதியிலும் அதன் கரையோரத்திலும் தமது வீடுகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். ஹமகுச்சியின் வீட்டைச் சூழப் பரந்து விரிந்து கிடந்த நிலப்பரப்பில் அவரது செழுமைமிக்க நெல்வயல்கள் பரந்திருந்தன.

**அறுவடைக்காலம்**

யப்பானில் நெல் அறுவடைக்காலம் தொடங்கியிருந்தது. ஹமகுச்சியின் வயல்களில் அறுவடை முடிவடைந்து நூற்றுக்கணக்கான நெற்போர்கள் சூடுமிதிப்புக்காகக் களத்து மேடுகளில் காத்து நின்றன. அமோக நெல் விளைச்சல் காரணமாகக் கிராம மக்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். ஹமகுச்சி தனது வீட்டு முற்றத்தில் அமர்ந்து கிராமத்தை நோட்டமிட்டார். கிராமத்தவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியைக் கொண்டாட விரும்பினார். எனினும் பகல் முழுவதும் கடும் வெய்யிலில் உழைத்த அவரது உடல் ஓய்வை நாடியதால் இளைய பேரப்பிள்ளை 'ததா'வுடன் வீட்டிலேயே தங்கி இருந்தார். வீதியோரங்களில் கம்பங்களில் பறக்கவிடப்பட்ட கொடிகள் கடுங்காற்றில் படபடப்பதையும், கயிறுகளில் தொங்க விடப்பட்ட பாரிய வெளிச்சக் கூடுகள் அசைந்தாடுவதையும், தனது கிராம மக்கள் கூடிக் களிப்பதற்காக கரையோரத்தில் ஒன்று திரளுவதையும் பார்த்துக் கொண்டிருந்தார். சூரியன் வெப்பக்கதிர்களைப் பரப்பிய வண்ணம் மேற்கு அடிவானை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

கடலில் இருந்து கடுமையான காற்று வீசிக்கொண்டிருந்தபோதிலும் சூரியனின் வெம்மை இன்னும் தணிந்தபாடில்லை. திடீரென மலைப்பகுதி அதிர்ந்தது. மலைப்பிரதேசத்தை ஊடுருவி கடல் அலைகள் மெதுவாகப் பாய்ந்து செல்வது போன்ற ஊர் உணர்வு. ஹமகுச்சியின் மனதில் ஏற்பட்டது. அவரது வீடு ஒரு கணநேரம் அதிர்ந்து மீண்டும் அமைதியடைந்தது.

'நிலநடுக்கம்' ஹமகுச்சியின் மனதில் தோன்றியது. 'ஆமாம், மிகத் தொலைவில் ஒரு நிலநடுக்கம்!' முதியவர் பல தடவைகள் நிலநடுக்கங்களை உணர்ந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார். எனவே அவர் பயப்படவில்லை. பதட்டப்படவுமில்லை. எனினும் தனது கிராமத்தை மிக ஆவலுடன் நோட்டமிட்டார். திடீரென எழுந்து கால் விரல் நுனிகளின் மீது நின்று கடலை உற்று நோக்கினார். கடல் இருள்வதையும், கடல் நீர் கரையை விட்டுத் தூரத் தூரச் செல்வதையும் கண்டார். கடல் நீர் பின்னோக்கிச் செல்வதைக் கண்ட கிராம மக்கள் யாவரும் கடற்கரையை நோக்கி ஓடினர். இவ்வாறான ஓர் அபூர்வக் காட்சியை அவர்களுள் எவரும் ஒரு போதும் கண்டது கிடையாது. ஹமகுச்சி மீண்டுமொரு கணம் கடலை நோக்கினார். மறுகணம் தனது இளைய பேரப்பிள்ளையைக் கூவியழைத்தார். 'ததா ஓடிப்போய் ஒரு தீப்பந்தம் கொளுத்தி வா, தாமதிக்க நேரமில்லை.... அவசரமாக ஓடி வா' என்றார். ததா மின்னல் வேகத்தில் வீட்டினுள் நுழைந்தான். புயல் வீசும் இரவுகளில் பயன்படுத்துவதற்கென பாட்டனார் விசேடமாகத் தயாரித்து வைத்திருந்த சவுக்கு மரப் பந்தத்தைக் கையிலெடுத்தான். கணப்பொழுதில் அதனைக் கொளுத்தி ஏந்தியவாறு பாட்டனாரை நோக்கி ஓடினான். பேரப்பிள்ளையின் கையில் இருந்து தீப்பந்தத்தை உருவியெடுத்த ஹமகுச்சி நெல்வயல்களை நோக்கி விரைந்தார். பாட்டனார் என்ன செய்யப்போகிறார் என்பதைப் பார்க்கும் ஆவலுடன் ததா அவரைப் பின் தொடர்ந்து ஓடிச்சென்றான். அவர் சூடு மிதிப்பதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருந்த நெற்போர்களை அண்மித்தார். முதலாவது வரிசையில் முதலாவது நெற்போரில் ஆரம்பித்து ஒவ்வொரு நெற்போரையும் தீ மூட்டினார். முதலாம் வரிசை முடிய இரண்டாம் வரிசையைத் தீ மூட்டத் தொடங்கினார். நன்கு உலர்ந்திருந்த நெற்போர்கள் துரிதமாகத் தீப்பற்றத் தொடங்கின. வேமாக வீசிய கடற்காற்று தீ பரவும் வேகத்தைத் துரிதப்படுத்தியது.

ததாவினால் தனது கண்களை நம்ப முடியவில்லை. சில நொடிகளில் நெற்போர்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தீப்பறிக்கொண்டன. தீ நாக்குகளும் கடும் புகையும் வான் நோக்கி எழுந்தன.

ததாவினால் துக்கத்தை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அழுது கதறியவாறு பாட்டனாரின் பின்னால் ஓடினான். கிராம மக்களின் உணவையும் தனது செல்வத்தையும் தீ மூட்டி அழிக்கும் அளவுக்கு பாட்டனாருக்கு நினைவு தவறிவிட்டதா என அவன் எண்ணினான். ததா எவ்வளவுதான் கதறியழுதாலும் ஹமகுச்சி தொடர்ந்தும் நெற்போர்களுக்குத் தீமூட்டிக்கொண்டே இருந்தார். கடைசி நெற்போரையும் கொளுத்திய பின்னரே அவர் தீப்பந்தத்தை அப்பால் எறிந்தார்.

*பூமியதிர்வுக்குட்பட்ட நாடுகளுள் யப்பான் நாடும் ஒன்றென்பதைப் பலரும் அறிந்திருப்பர். ஆனால் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கை உட்பட இந்தோனேசியா வரையிலான பல நாடுகளைத் தாக்கிய சுனாமி அலைகள் பற்றி நாம் அன்றுதான் அறிந்து கொண்டோம். பல வருடங்களுக்கு முன்பிருந்தே யப்பான் நாடு பூமியதிர்ச்சிகளால் தோன்றும் சுனாமி அனர்த்தங்களைச் சந்தித்துள்ளன என்பதை 1850 - 1905 வரையான காலத்தில் வாழ்ந்தவரான லஃப்காடியோ ஹேர்ண் என்பவர் எழுதிய சிறுகதையின் மூலம் அறிய முடிகின்றது. அவர் அன்றைய நாட்களில் எழுதிய சிறுகதையைத் தமிழாக்கம் செய்து பிரசுரித்துள்ளார். எம்.எச்.எம். யாக்கூத் அவர்கள். அவரது தமிழாக்கச் சிறுகதையை வாசித்தோம். வாசகர்களுக்குத் தருகின்றோம். வாசிப்போம்.*

**- இதழாசிரியர்.**

### அபூர்வக் காட்சி

தீப்பிளம்புகள் வானிற் கிளம்புவதைக் கண்ட 'மணி கிலுக்குபவர்' கோயிற் பெருமணியைக் கிலுக்கத் தொடங்கினார். தொடர்ந்தும் கிலுக்கிக் கொண்டே இருந்தார். கோயில் மணியோசை கடற்கரையில் குழுமியிருந் தோரின் காதுகளில் விழுந்தது. அவர்கள் மணியோசை வந்த திசையை நோக்கித் திரும்பி மலையை நோக்கி ஓட்டம் பிடித்தனர். ஹமகுச்சியின் நெல்வயல்களில் தீ பற்றி எரியும் வேளையில் 'அபூர்வக் கடற் காட்சி யைப்' பார்த்துக்கொண்டிருக்க யாருக்குத்தான் மனம் வரும்? சில இளைஞர்களே முதலில் மலையை அடைந்தனர். அவர்கள் உடனடியாகத் தீயை அணைக்க முனைந்தனர். அதனைக் கண்ட ஹமகுச்சி வயல் வெளியின் எதிரே நின்று கைகளை அகல விரித்து அவர்களைத் தடுத்தார்.

'வயற்காடு பற்றியெரியட்டும்' இளைஞர்களே அது பற்றியெரியட்டும்.' அவர் உறுதியான குரலில் கூறினார். ஆண்கள் - பெண்கள், சிறுவர்கள் - சிறுமியர்கள், இளையோர் - முதியோர், கைக்குழந்தைகளைக் கையிலேந்திய தாய்மார்கள், கர்ப்பிணிகள் எல்லோரும் மலைப்பகுதியை நோக்கி விரைந்தனர். முழுக் கிராமமும் மேட்டுப் பகுதியை அடைந்தது. வயலில் பற்றி எரியும் தீயை அணைப்பதற்கு ஹமகுச்சிக்கு உதவுவதே அவர்களது வருகையின் நோக்கம். வயோதிபர்கள், மெதுவாக மலையில் ஏறிக்கொண்டிருந் தனர். இளையோர்கள் அவர்களது கைகளைப் பிடித்து மலையில் ஏற உதவி செய்தனர். ஹமகுச்சி, கொழுந்து விட்டெரியும் தனது நெல்வயல்களின் முன்னே பொறுமையாக நின்றுகொண்டிருந்தார்.

சூரியன் மறைந்து சென்றான் மலைச்சாரலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்ட மக்கள் பேரப்பிள்ளை ததாவிடம் 'நடந்தது என்ன?' என விசாரித்தனர். 'பாட்டனாருக்கு மூளை பேதலித்து விட்டதா? பாட்டனார் ஏன் தீயை அணைக்க விடவில்லை' என்றவாறாகப் பல வினாக்களை எழுப்பினர்.

'எனக்குத் தெரியாது' பயத்தில் நடுங்கிய ததா தேம்பித் தேம்பிக் கூறினான். 'பாட்டனார் வேண்டுமென்றுதான் நெற்போர்களுக்குத் தீமூட்டினார் என்பது மட்டும் எனக்குத் தெரியும். அவர் நெற்போர்களுக்குத் தீ மூட்டுவதை நான் கண்டேன்' என்றான். பேரனின் குரல் ஹமகுச்சியின் காதுகளில் விழுந்தது. அவர் "ஆமாம், நான்தான் நெற்போர்களுக்கு தீ மூட்டினேன். சரி.... நீங்கள் எல்லோரும் இங்கு வந்து சேர்ந்து விட்டீர்களா?" என்றார் உரத்த குரலில்.

கிராம மக்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். 'ஆமாம்.... எல்லோரும் இங்கே தான் இருக்கிறோம். ஆனால் இங்கு என்ன நடக்கிறது என்பதுதான் எமக்குப் புரியவில்லை' என்றனர்.

'அதோ பாருங்கள்', கடலை நோக்கிக் கையை நீட்டிய ஹமகுச்சி உரத்துக் கூறினார். 'நன்றாகப் பாருங்கள். எனக்கு மூளை பிசகிப் போய்விட்டதென்று நினைக்கிறீர்களா?" என்றார்.

அனைவரும் கடலை நோக்கித் திரும்பினர். மங்கல் ஒளியில் கடலைப் பார்த்தனர். வெகுதூரத்தே கடலும் வானும் சேரும் இடத்தில் இருந்து ஒரு கருங்கோடு முன்னோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. படிப்படியாக அதன் அகலமும் பருமனும் அதிகரித்தன. கடல் கரையை நோக்கி வந்த கொண்டிருந்தது. அது ஒரு பாறைச்சுவர் போலக் காட்சியளித்தது. காற்றாடி பறப்பதை விடத் துரிதமாக அது புரண்டு வந்துகொண்டிருந்தது.

'கடல் வருகிறது - கடல் வருகிறது' மக்கள் கூச்சலிட்டனர். மறுகணம் பாரிய நீர்ப்பாளம் கடற்கரையில் மோதியடித்தது. இடிமுழக்கத்தை விஞ்சிய ஓசை அப்பிரதேசத்தை ஆட்கொண்டது. மலைப்பிரதேசம் ஆட்டம் கண்டு நிலைபெற்றது.

வெண்ணுரைப் படலம் மக்கள் திரண்டிருந்த பகுதியை எட்டியது. கடல் திரும்பிச் சென்றபோது கரையோரத்திலும் மலைச்சாரலிலும் அமைந்திருந்த எந்தவொரு வீடும் எந்தவொரு கட்டடமும் மிஞ்சியிருக்கவில்லை. முழுக்கிராமமும் கழுவிச்செல்லப்பட்டிருந்தது.

கிராம மக்கள் மலைத்து வாயடைத்து நின்றனர். சிறிது நேரத்தின் பின்னர் மதினுட்பமிக்க வயோதிபர் ஹமகுச்சி இதமான குரலில் 'நான் நெற்போர்களுக்குத் தீமூட்டியதேன் என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதல்லவா....? மலைச்சாரலில் எனது வீடு பாதுகாப்பாக இருக்கிறது. வீட்டில் தாராளமாக இடமிருக்கிறது. பாதிப்பேர் அங்கு தங்கலாம். மலை முகட்டில் கோயிலும் பாதுகாப்பாக இருக்கிறது. மீதிப் பாதிப்பேர் அங்கு தங்கலாம்' என்றார்.

கிராம மக்கள் மனதில் பயங்கரமான ஒரு கனவில் இருந்து மீண்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. மதினுட்பமிக்க முதியவர் எவ்வளவு அரிய ஒரு கைங்கரியத்தைச் செய்திருக்கிறார் என்பதை அவர்கள் விளங்கிக்கொண்டனர். தனது கிராம மக்களைக் காப்பாறுவதற்காக ஹமகுச்சி தனது செல்வத்தையெல்லாம் அழித்து ஏழையானார். மதினுட்பமிக்க முதியவரான ஹமகுச்சிக்கு நன்றி தெரிவிக்கக் கிராம மக்கள் அனைவரும் அவரது முன்னிலையில் முழந்தாளிட்டுச் சிரம் பணிந்தனர்.

Lafcadio Hearn அவர்கள் எழுதிய The burning of the Ricefield. எனும் சுனாமி அனுபவக் கதையின் தமிழ் வடிவம். தமிழாக்கம் செய்தவர் எம்.எச்.எம்.யாக்கூத்.

THULIRGHAL
201/1 OLD AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.

**நீ ஆயிரம் ஆயிரம் நல்ல நூல்களைக் கற்றாலும் கற்றபடி, ஒழுகாதவரை அந்நூல்களைக் கற்றதால் ஒரு பலனையும் பெற முடியாது.**

**- இமாம் கஸ்ஸாலி.**

THULIRGHAL
201/1 OLD AVENUE,
3RD CROSS STREET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



கந்தையா முருகதாசன்,
கல்விஉதவிப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

# விளையும் பயிர்

"நித்தியா அஞ்சு மணியாச்சுது எழும்பு" என்ற தாயின் குரல்கேட்டு நித்தியா அவசரசமாக எழுந்தாள். தண்ணீர்க் குடத்தடிக்குச் சென்று, கால் முகம் கழுவிக் கொண்டாள். சாமிப் படத்தருகில் தொங்கிய சிரட்டைக் குடுவையிலிருந்து திருநீற்றை மூன்று விரல்களாலும் எடுத்து நெற்றியிலே பூசினாள்.

மண்ணெய் விளக்கையும் புத்தகம், கொப்பிகளையும் எடுத்துக்கொண்டு விறாந்தையில் அமர்ந்தாள்.

மண்சுவர் எழுப்பப்பட்டுத் தென்னங்கீற்றுக்களால் வேயப்பட்ட அடக்கமான ஆனால், ஓரளவு வசதியான வீடு அவர்களுடையது. சமையலறை, விறாந்தை, சாமியறை என்ற பிரிப்புக்களையும் கொண்டது. வெய்யிலையும் குளிரையும் தாங்கி அவற்றுக்கு ஈடுகொடுத்து நல்ல சுவாத்தியத்தை வழங்கக்கூடிய வீடு.

❋ ❋ ❋

பாடசாலையில் வழங்கப்படும் வேலைகளை அன்று இரவே செய்து முடித்துவிடுவது நித்தியாவின் வழக்கம். அவளது தாயின் கண்டிப்பான கட்டளை இது.


காலை எழுந்ததும் அன்று கற்க இருக்கும் பாடங்களை வாசித்துக் கொள்வாள்.

"நாளைக்கு முதலாம் பாட அலகில் கணிப்பீடு வைப்பன் பிள்ளையள்" என்று தமிழாசிரியை கருணா கூறியது அவளது நினைவில் பொறியாகத் தட்டியது. தமிழ்ப்பாடப் புத்தகத்தைத் தூக்கினாள்.

"மகிழ்ச்சியான குடும்பம்" என்பது அந்தப் பாட அலகு. அந்தப் பாட அலகின் மீது கவனத்தைச் செலுத்தினாள். கருணா ரீச்சர் அந்தப் பாடத்தை வகுப்பறையில் நிகழ்த்திய அந்தப் பொழுதுகள் அவளது மனத்திரையில் படமாக விரிந்தன.

பாடவிடயம் தொடர்பான பொது விளக்கம் அளித்த அவர் பின்னர் அந்த உரையாடற் பகுதியைப் பாத்திரமேற்று வாசிப்பதற்கு ஏற்ற வகையில் மாணவர்களை வகைப்படுத்தி வாசிக்க ஏற்பாடு செய்தார்.

அம்மா, அப்பா, பாட்டி, சிவா என அமையும் பாத்திரங்கள் அவளது மன அரங்கில் நிழலாகின.



பின்னர் மாணவர்களைக் குழுக்களாக வகுத்து பாடப்பகுதியில் இடம் பெறுகின்ற நற்பண்புகளைப் பட்டியற்படுத்தும் பணியில் ஈடுபடுத்தினார்.

குடும்ப உறுப்பினரிடையே இருக்க வேண்டிய அன்புத் தொடர்பு, ஒருவருக்கொருவர் உதவியாயிருத்தல், தமது வேலைகளைத் தாமே செய்தல், முதியோருக்கு உதவுதல், அயலவருடன் இணக்கமான உறவைப் பேணுதல், உயிர்கள் மீது அன்பு செலுத்துதல் என்ற வகையிலே பட்டியற்படுத்தப்பட்ட விடயங்களை உதாரணங்களுடன் விளக்கினார் கருணா ரீச்சர்.

❋ ❋ ❋

படித்து முடிந்ததும் நித்தியாவின் மனது நிறைந்தது. அன்றைய கணிப்பீட்டில் தொண்ணூறு புள்ளிகள் வரை பெறப்போவதை அவள் சிந்திக்கவில்லை.

❋ ❋ ❋

"பிள்ளை மாட்டுக்குக் கொஞ்சம் வைக்கல் எடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடு, ஆட்டை அவிட்டுப் பின் வளவுக்கை கட்டி விடு" அம்மாவின் குரல் மீண்டும் ஒலித்தது.

சுறுசுறுப்பாக இயங்கினாள் வித்தியா. அம்மா சொல்லாத வேலைகள் சிலவற்றையும் செய்து முடித்தாள். பாடசாலைக்கு நேரம் ஆகிவிட்டது என்பதற்காக அவளது மனது மணி அடித்தது.

அன்றைய பாடசாலை நாள் அவளுக்கு இனிமையாக மலர்ந்தது. தமிழாசிரியர் ஈஸ்வரன் வழங்கிய நற்சிந்தனை அவளது மனதில் பசுமரத்தாணி போல் பதிந்தது.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்னும் திருக்குறளுக்கு அவர் விரிவான விளக்கம் வழங்கினார். அந்தக் குறுகிய பாடலினுள் பொதிந்து கிடந்த மாணவர் கடமைகளைஅவர் விளக்கமாகவும், உதாரணங்களுடனும் எடுத்துக் கூறினார்.

கற்க

எவ்வாறு கற்க வேண்டும்? "கசடு அறக் கற்க வேண்டும்" அதாவது அறியாமை நீங்கும்படி கற்க வேண்டும். எவற்றைக் கற்க வேண்டும்? "மாணவர்கள் தமக்குத் தேவையானவற்றைத் தெரிவு செய்து கற்கவேண்டும்"

"எதற்காக கற்க வேண்டும்?" கற்றபின் அதற்குத் தக நிற்கக் கற்க வேண்டும். அதாவது கற்றபின் அதன்படி வாழ்வதற்காகக் கற்க வேண்டும்"

என அவர் வழங்கிய தெளிவான விளக்கம் அந் தப் பிஞ்சு வயதிலும் நித்தியாவுக்குக் கல்வியின் அவசியத் தையும் சிறப்பையும் ஓரளவு புரிய வைத்தது.

மதிய இடைவேளைக்கான மணி அடித்து ஓய்ந்தது. வகுப்பறைகளை விட்டு வெளியேறிய மாணவர்களின் சத்தம் வெள்ளமாய் எங்கும் பரவியது.

ஆசிரியர்கள் ஓய்வறையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

பெரும்பாலான மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாடசாலைச் சிற்றுண்டிச் சாலையில் மாணவர் கூட்டம் முண்டியடித்தது. இனிப்புப் பண்டங்களின் விற்பனை சூடுபிடித்தது.

நித்தியா மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு ஓய்வாக வகுப்பறையில் இருந்தாள். அவள் அருகில் வந்த அவளது நண்பி அனுசா "என்ன நித்தி விளையாடப் போகேல்லையே" என்றபடி அருகில் அமர்ந்தாள்.

"இல்லை அனு" என்ற நித்தியா "அப்பா சொன்னவர் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சநேரம் ஓய்வெடுக்க வேணுமெண்டு" என்று கூறியபடி அனுவை நோக்கினாள்.

**உண்மையும் நேர்மையும் கலந்த கற்றலின் வழி ஒழுகும் பண்பு. பெற்றோரிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்துமே சிறுவர்களினிடத் திற்குக் கடத்தப்படுகின்றது. நித்தியாவைப் போன்று மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவி குணராஜா நிரோதா அவர்களின் நேர் மையை வெளிப்படுத்தும் செய்திப் பாராட்டினை 18.06.2004ஆம் திகதி வெளியான தினத்தாளிலிருந்து வாசகர்களுக்குத் தருகின்றோம்.**

நித்தியாவின் தந்தை சண்முகம் ஒரு விவசாயி. சிறுபயிர் செய்பவன். தாய் வசந்தியும் நல்ல உழைப்பாளிதான். இருவரும் தமக்கே உரிய காணித் துண்டில் சிறுபயிர் விளைத்தனர். ஓய்வான நாள்களில் இருவரும் கூலி வேலைக்கும் செல்வார்கள்.

சண்முகம் அதிகப் படிக்காதவன். படிப்பை இழந்ததால் தான்படும் கஸ்டங்களையும், அவமானங்களையும் தனது பிள்ளை பெற்றுவிடக் கூடாது என்பதில் சண்முகம் மிகவும் கவனமாக இருந்தான். தனது பிள்ளை படித்து, முன்னேறி, வசதியாக வாழவேண்டும் என்பதே அவனது பிரார்த்தனையாகவும் இருந்தது.

அதற்காக அவனும் மனைவியும் மாடாய் உழைத்தனர்.

❋ ❋ ❋

சண்முகத்தின் கனவுகளையும், கற்பனைகளையும் நித்தியா உணரவில்லை. ஆயினும், தன்மீது தனது தாயும் தந்தையும் காட்டும் அக்கறையும் ஆதரவும் அவளுக்கு அவர்களின் அன்பை விளக்கியது. அவர்களது விருப்பப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அவள் விரும்பினாள். அவர்களது கட்டளைகளை மீறக்கூடாது என்ப தில் மிகவும் உறுதி யாய் இருந்தாள்.

சிந்தனையிலிருந்து விடுபட்ட நித்தியா தன் அருகிலிருந்து தன்னையே பார்த்த படியிருந்த அனுவை நோக்கினாள்.

"உம்முடைய அப்பா உமக்கு அடிக்கிறவரா?" என்ற கேள்வியைத் திடீரென நித்தியாவின் முன் வைத்தாள் அனு.

அந்தக் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாத நித்தியா "இல்லை" என்று தலையை ஆட்டினாள்.

அனுவின் முகம் திடீரென வாடியது. கண்கள் கலங்கின. அதைக் கண்ட நித்தியா தடுமாறிப் போனாள்.

"இல்லை, சில நேரம் அடிக்கிறவர்தான்" என்று ஒரு பொய்யைக் கூறினாள்.

❋ ❋ ❋

நேரம் பிற்பகல் 2.40 பாடசாலையின் விடுகை மணி ஒலித்தது. பாடசாலைக் கீதம் பாடப்பட்டது. மாணவர்கள் அணியணியாக வெளியேறினர். மேலதிக வகுப்புகளுக்காகச் சில மாணவர்கள் வகுப்பறைகளிலே தங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித பாடத்திற்கான மேலதிக வகுப்பு முடிந்ததும் நித்தியா புறப்பட்டாள்.

THULIRGHAL
201/1, OLD AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.

❁ ❁ ❁

ஒழுங்கையில் நடந்து கொண்டிருந்த அவளது கால்கள் திடீரென நின்றன. கண்கள் அகல விரிந்தன. ஒழுங்கையின் ஓரத்தில் அரைப்பகுதி புல்லுக்குள் மறைந்தபடி வெய்யிலில் ஒளிர்ந்து கொண்டிருந்த அந்தப் பொருளை உற்று நோக்கினாள்.

சிவப்புக் கல்லுப் பதித்த கனதியான ஓர் அட்டியல் அது. முன்னும் பின்னுமாக ஒருதடவை நோக்கினாள். யாருமே தென்படவில்லை. அதனைத் தன் புத்தகப் பையிலே போட்டுக் கொண்டாள்.

வலது பக்கமாகத் திரும்பிச்சற்று தூரம் நடந்தவள் ஒரு பெரிய வீட்டின் முன்னே நின்று "வீட்டுக்காரர், வீட்டுக்காரர்...." என்று குரல் கொடுத்தாள்.

சில கணப்பொழுதில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

"என்ன பிள்ளை?"என்று கேட்ட அவர் அவளை நோக்கியதும் சிந்தனையில் ஆழ்ந்தார். அந்தப் பிள்ளையின் முகத்தை எங்கேயோ பார்த்திருப்பதாக அவரது மனது கூறியது.

புத்தகப் பையினுள் கையைவிட்ட நித்தியா அந்தப் பொருளை எடுத்து அவரிடம் கொடுத்தாள். "ஒழுங்கையிக்கை கண்டு எடுத்தனான்" என்று கூறிய நித்தியாவை அதிர்ச்சியுடன் பார்த்தார் அவர்.

அந்தப் பிரதேசத்தின் கிராம சேவகர் அவர். அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. இந்தக் காலத்தில் இப்படி ஒரு காரியமா? என அவர் மனம் வினாக்குறி எழுப்பியது.

"உம்முடைய அப்பாவின்ர பெயர் என்னம்மா? என்று அன்புடன் நித்தியாவை நோக்கினார் கிராம சேவகர். "நல்லபிள்ளை" என்று அவளது முதுகிலே தட்டினார்.

நித்தியா தந்தையின் பெயரைக் கூறினாள். திடீரென வீட்டின் பக்கம் திரும்பிய கிராம சேவகர் "கமலம்... கமலம்... இஞ்சை ஒருக்கா வந்திட்டுப்போம்" என்று குரல் கொடுத்தார்.

வெளியே வந்த கமலம். இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். கிராம சேவகர் தனது கையிலிருந்த பொருளைக் கமலத்திடம் கொடுத்து விடயத்தை விபரமாகக் கூறினார்.

பொருளைப் பார்த்த கமலம் ஆச்சரியக்குறியுடன் நித்தியாவை நோக்கினாள். "ஆற்ற பிள்ளையடியம்மா நீ" என்று கேட்டவாறே அவளது கன்னத்தைத் தடவி அணைத்துக் கொண்டாள்.

சில நிமிடங்கள் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தார் கிராம சேவகர்.

"பிள்ளை நீர் வீட்டைபோய் உடனடியாக அப்பாவை இஞ்சை வந்திட்டுப்போகச் சொல்லும்" என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

அனுப்பிய அவர் சுறுசுறுப்பாக இயங்கினார். தனது அலுவலக விளம்பரப் பலகையில் அந்த விடயம் பற்றி எழுதினார். உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளும்படி எழுதினார். தனது கண்களில் தென்பட்டவர்கள் எல்லோரிடமும் விடயத்தைக் கூறி ஊர் அறியச் செய்தார்.

❁ ❁ ❁

அடுத்த நாள் காலை ஆறு மணியிருக்கும் அன்று வெள்ளிக்கிழமை. பொருளுக்கு உரியவர்கள் கிராம சேவகரிடம் வந்தனர். உரிய ஆதாரத்தைச் சமர்ப்பித்தனர். இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்த பொருள் அது.

நித்தியாவைக் கண்டதும் பொளுக்குரியவளான அந்தப் பெண்மணி பாக்கியம் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

அவளது கண்களில் ஆனந்தக் கண்ணீர். செய்தி அறிந்த பாடசாலை அதிபரும் அங்கு வந்து சேர்ந்தார்.

நித்தியாவையும் அவளது பெற்றோரையும் நித்தியாவுக்குக் கல்வி பயிற்றிய ஆசிரியர்களையும் அதிபரையும் கிராம சேவகர் பாராட்டிப் பேசினார்.

பொருளுக்குரியவர்கள் தமது நன்றியைப் பல தடவைகள் தெரிவித்துக் கொண்டனர். இப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்த நித்தியாவுக்கு ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்ய விரும்புவதாக அவர்கள் விநயத்துடன் கூறினார்கள்.

சில கணப்பொழுது அங்கு மௌனம் நிலவியது. மௌனத்தைப் பாடசாலை அதிபர் கலைத்தார்.

"அப்படியெண்டால் இண்டைக்குப் பாடசாலையில் காலை ஆராதனையின் போது அதை நித்தியாவுக்கு வழங்கிக் கௌரவிப்பம்" என்றார் அவர். எல்லோருக்கும் அது சரியாகவேபட்டது.

❁ ❁ ❁

பாடசாலை காலை ஆராதனையின் போது நித்தியாவும் அவளது பெற்றாரும் மேடைக்கு வந்தபோது கரகோசம் கட்டடங்கள் எங்கும் மோதி எதிரொலித்தது.

அவளது பெற்றார் மகிழ்ச்சியில் கரைந்து போனார்கள். கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

பொருளுக்குரியவர்கள் கடித உறையில் வைக்கப்பட்ட ஒரு தொகைப் பணத்தை நித்தியாவின் கைகளில் வைத்து ஆதரவாக அவளைத் தடவினர்.

அந்தக் கடித உறையில் ரூபா ஐயாயிரம் இருந்ததை அப்போது அவர்கள் எவருமே அறியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள நெருக்கீடுகளைப் போக்குபவை

கட்டுரை

# அன்பும் ஆதரவுமே....

அண்மையில் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தத்தினால் முல்லைத்தீவு, மருதங்கேணி, கல்முனை, மட்டக்களப்பு முதலிய பிரதேசங்களில் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், சொத்து சேதங்கள், அவலங்கள், மக்கள் மனதில் பயம், பீதி, துக்கம், பெரும்துயரம் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளன. இவை மக்களுக்கு பெரும் உள நெருக்கீடுகளையும் உருவாக்கியுள்ளன. இத்தகைய உளப் பாதிப்புகளைப் பற்றி உள வைத்தியர்கள் உளவியலாளர்கள் விரிவாக விளக்கியுள்ளார்கள். பல கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மனல்காடுப் பகுதியில் அமைந்த இரண்டு முகாம்களில் உள்ள 7 தொடக்கம் 15 வயதுடைய 71 பிள்ளைகளை நேர்முகமாகக் கண்டு ஆய்வு செய்தபோது, இவர்களில் 60 விழுக்காட்டினர், ஏற்கனவே போர் நெருக்கீட்டுக்கு உட்பட்டவர்கள் எனவும், இவர்களில் 42 விழுக்காட்டினரில் நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோய்க்குரிய குணக்குறிகள் காணப்படுவதாகவும், அறிக்கைப் படுத்தியுள்ளனர். இவ்வறிக்கையைச் சமர்ப்பித்தவர்கள் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ''விவோ'' (VIVO) என்னும் உளவியலாளர் நிறுவத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 2000 ஆண்டு இங்கு வந்து உளவடு பற்றி ஆய்வுகளைச் செய்துள்ள னர். நம் நாட்டு அரசியல் போக்கையும், சமூக பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்தவர்கள். இவர்களின் இக் கணிப்பு நமது குழந்தைகளின் உளவடுபற்றிய உண்மை நிலையை கூறுகிறது எனக் கொள்ளலாம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளைத் தரிசித்து, மாணவர்கள், ஆசிரியர்களு டன் கதைக்கும் போது, நாம் காண்பவர்கள் பேரழிவை நேரே கண்டவர்கள், பேரலையால் அடிக்கப்பட்டுப் பாதிப்புற்றவர்கள், உறவினரை இழந்தவர்கள், தனித்துப் போனவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் எனப் பலவகையின ராகும். இவர்களில் காணப்படும் உணர்வுகள் துயரமும், பயமுமே. ஒவ்வொரு மாத மும் வரும் 26 ஆம் திகதி இவர்களை மேலும் பயமூட்டுகிறது. பதற்றத்தையோ பதகழிப் பையோ உண்டாக்குகிறது. பூமி அதிர்வு ஏற்படும் போதெல்லாம், சுனாமி மீண்டும் வருமோ என்று ஏங்குகிறார்கள். இவர்களின் பயம் போக்கி, துயரம் நீக்கி அவர்களின் அத்தியாவசியதேவை களைப் பூர்த்தி செய்வது இன்றைய உடனடிக் கடமையாகும். பாடசாலைகளில் இச்சிறார்களுக்கு நமது சொத்தான ஆதரவை நல்கி, அன்பை வளர்க்கவேண்டும். இன்றைய ஆசிரியர்க ளின் முதன்மை யான கருமம் இதுவாகும்.

இவ்வனர் தங்களால் ஏற்படும் நெருக்கீட்டின் தாக்கங்கள் சிறுவர்களில் பெரியவர்களை விடக்குறைவாகவே வெளிக்காட் டப்படுகின்றன. இந்நிகழ்வுகளின் விளைவுகளை முழுமையா கப் புரிந்து கொள்ளாமையும், நெருக்கீடுகளை விளையாட்டுத் தனமாகவும் குழந்தைத்தனமாகவும் எடுத்துக்கொள்வதாலும் அவர்களில் உள வெளிப்பாடுகள் குறைவாகக் காணப்படலாம். அதனால் அவர்களில் ஏற்படும் பாதிப்புகள் வெளிப்படையில் குறைவுபோலத் தோன்றலாம். ஆனால் அவை அவ்வாறு குறைவாக இருக்கின்றன என நினைப்பது தவறாகும். சிறு பிள்ளைகள் பெரியவர்களைப் போலவே உணர்வுகளை அனுபவிப்பார்கள் என்பதை மறக்கக்கூடாது. பெரியவர்களைப் போலச் சத்தம் போட்டோ, கதறியோ தங்கள் பயத்தை அல்லது



கவலையை வெளிக் காட்டாது விட லாம். அல்லது தங்கள் உணர்வுகளை இன்னொருவருடன் தொடர் பாட்டை வெளிப் படுத்தும் ஆற்றல் இல்லாது இருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பயம் அல்லது துயரம் இல்லை என்று சொல்வதற்கு இல்லை. அவர்களுடன் இணைந்து, அன்பாகக் கலந்துரையாடினால் அவர்களின் உள்ளார்ந்த துயரங்களையும் இடர்களையும் புரிந்து கொள்ள லாம்.

பயம், துயரம் கொண்ட சிறுவர்களிற் சிலருக்கு உணர்ச்சிச் சிக்கல்கள், கற்றல் குறைபாடுகள், நடத்தைப் பிறழ்வுகள்,உள நோய்கள் ஏற்படுவது உண்டு. வேறு சிலருக்கு காலம் கடந்து உளச்சிக்கல் ஏற்படுவதுண்டு. எவ்வளவு தூரம் உளப்பாதிப்பு ஒருவருக்கு ஏற்படும் என்பது தனியாள் இயல்புகளில் தங்கியுள்ளது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் உள்ள மாணவருக்கு இக்குறைபாடுகள் எந்தளவிற்கு உள்ளது என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

அறிதல் வேண்டும் எனினும் உள மருத்துவ நிலையப் பதிவுகளிலும் அதிபர், ஆசிரியர் அவதானிப்புக்களிலும் கணிச மான தொகையான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியப்படுகிறது.

உணர்ச்சிக்கல் உள்ளவர்களில்

கவலை

கோபம்

அமைதியின்மை/ தன்னடக்கமின்மை

பயம்

மனச் சோர்வு

தளர்ந்து/ ஓய்வாக இருக்க முடியாமை

ஏக்கம்

தாழ்ந்த மனப்பாங்கு, தன்னைப்பற்றிய குறைந்தளவு எண்ணம் என்பன போன்ற உணர்ச்சிக் சிக்கல்கள் உள்ளவர்கள் தமது நடத்தையில் பல்வேறு வெளிப்பாடுகளைக் கொண்டிப்பார்கள். அவர்களில் காணப்படும்.

தனித்திருத்தல்

களவு

பொய்

போட்டி பொறாமை

நடுக்கம்

எதற்கும் இன்னொருவர் உதவியை நாடுதல்

தானாக செயற்படமுடியாதிருத்தல்

என்பவை இத்தகைய உணர்ச்சிச்சிக்கல்களின் வெளிபாடுகளாகும். இவை நடத்தைப் பிறழ்வுகள் எனப்படுகின்றன.

அனர்த்தங்களின் பாதிப்புக்களால் மாணவர்களுக்கு ஏற்படும் உளச்சிக்கல்கள், கற்றல் குறைபாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

பாடசாலைக்குச் செல்ல ஆர்வம் இல்லாமை

விடயம் விளங்காமை

கவனக்குறைவு

ஞாபகக் குறைவு / மறதி

வகுப்பு வேலைகளில் அக்கறையின்மை

வகுப்பில் நித்திரை கொள்ளல்

களைத்துப் போதல்

சலித்துப் போதல்

ஆசிரியர், மாணவருடன் கதைத்தலைத் தவிர்த்தல்

விளங்காதவற்றைக் கேட்கப் பயப்படுதல் / பின்னிற்றல்

பகற்கனவு

பகிர்ந்துகொள்ளாமை

இடையில் ஊக்கம் குலைதல்

புலன் திசை திரும்பல்

இத்தகைய வெளிபாடுகளை உளச்சிக்கல்களால் பாதிப்புற்றுள்ள மாணவர்களிடத்தில் அவதானிக்கலாம்.

இவற்றைவிட, மன உளைச்சல் போன்ற மனநோய்களாலும் பீடிக்கப்பட்டவர்களாகவும் பலர் இருக்கலாம். இவர்களுக்கு உளவளத்துணைப்பயிற்சி பெற்றவர்களே உதவுதல் நன்று. இத்துறையில் பயிற்சியோ அனுபவமோ இல்லாதவர்கள் உதவ முனைவது தவறான சிகிச்சையில் முடிவடையலாம்.

நமது தமிழர் முகங்களில் உள நோய் என்றால் அதற்கு ஒரு தனி வடு உண்டு. உடற்குறைபாடு போல் உளக்குறைபாடுகளை எடுத்துக் கொள்வதில்லை. காய்ச்சல், பல்வலி, கண்நோய் அல்லது பார்வைக்குறைபாடு என்றால் துறைசார்ந்த வைத்தியரிடம் சிகிச்சை பெறத் தயங்க மாட்டார்கள். அதை ஒரு வடு வாகவும் கொள்ளமாட்டார்கள். ஆனால் உளக்குறைபாடு என்றால் மறைப்பார்கள். சிகிச்சை பெறத் தயக்கம் காட்டுவார்கள். இந்த மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாதவரை உளவளத் துணை பெறுவதில் விருப்பம் காட்டுவதோ, நாடுவதோ குறைவாகவே இருக்கும். இது மனவருத்தத்துக்குரியதாகும்.

பிள்ளைகளை அறிந்துகொள்வோம் என்ற விடயம் ஆசிரியர்களுக்கு மிக முக்கியமானது. ஆண்டு ஒன்றில் மாணவரை அறிந்தால் மட்டும் போதாது. தொடர்ச்சியாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாணவரை அறிந்துகொள்ளல் எனும் செயற்பாடு நடைபெறுதல் மிகப் பொருத்தமானதாகும். குறிப்பாகக் கடல்கோள் அனர்த்தத்தின் பின்னர், பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் மாற்றங்களை நுணுக்கமாக ஆசிரியர் அறிந்திருத்தல் அம்மாணவரை முன்னேற்றுவதற்கு உதவியாயிருக்கும்.

கடல்கோள் அனர்த்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் ஒவ்வொருவரைப் பற்றியும் நன்று அறிந்திருத்தல் மிக மிக அவசியமாகும். விசேடமாகப் பேரலை அடித்த போது, அவர்கள் எதிர் நோக்கிய ஆபத்து, ஏற்பட்ட பயம், குடும்ப இழப்புக்கள் முதலியவற்றையும், அனர்த்தத்தின் பின்னர் அவர்களில்

**க.கந்தசாமி**
பணிப்பாளர், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்.

ஏற்பட்டுள்ள நடத்தை மாற்றங்களையும் குறித்து வைத்திருத்தல் வரவேற்கக்கூடிய விடயமாகும். இவ்விடயம் தொடர்பாக வினாக்கொத்துக்கள் உள்ளன. உள ஆரோக்கியம் தொடர்பாக வினாக்கொத்துக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி நோக்கத்திற்காகத் தயாரிக்கப்பட்டவை. அவற்றிலிருந்து ஆசிரியர் தனது மாணவருக்கும், சூழலுக்கும் பொருத்தமான ஒரு வினாக்கொத்தைத் தயாரித்துக்கொள்ளலாம். வாரத்தில் ஒரு தடவையோ அல்லது மாதத்தில் ஒரு முறையோ மாணவருடன் கலந்துரையாடி வினாக்கொத்தை நிரப்பி அவரின் முன்னேற்றத்தையோ அல்லது பின்னடைவையோ கணித்துக்கொள்ளலாம். அத்தகைய வினாக்கொத்துக்கள் தரும் விபரங்களுக்கேற்ப மாணவரது உடல்உள நல முன்னேற்றத்திற்குப் பொருத்தமான, தகுந்த உளநல மருத்துவ உதவிகள் வழங்கும் வழிகளைக் கண்டறிதல் வேண்டும்.

ஆசிரியர்கள் எவ்வளவு அக்கறை எடுத்து இதனைச் செய்கிறார்களோ அவ்வளவுக்கு எமது சிறார்கள் பலரை இந்த ஆபத்தின் விளிம்பிலிருந்து காப்பாற்றிக்கொள்ளலாம்.

பொதுவாக, இந்த ஆபத்திலிருந்து சிறார்களை மீட்பதற்கு அறிவு ரீதியாக விளக்கம் கொடுக்கப்படல் வேண்டும். அனர்த்தம் பற்றியும், குறிப்பாகப் போர் போன்ற மனிதர் ஆக்கும் அனர்த்தம், இயற்கையாக நிகழும் அனர்த்தங்கள் பற்றிய யதார்த்தங்களைப் பிள்ளைகளின் தரம், விளங்கும் ஆற்றல் என்பவற்றுக்கேற்ப அறிய வைத்தல் நன்று. இவை பற்றிய பயம் ஓரளவு குறையும்.

அடுத்து இறப்பு என்பது யாராலும் தவிர்க்கமுடியாத நிகழ்வு என்பதும், இறப்பு என்றால் என்ன? என்பதைப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான ரீதியாக அறியவைக்கவும் வேண்டும். இறப்பு என்றால் பிள்ளைகளுக்கு அதுவும் ஏழு அல்லது எட்டு வயதிற்கு குறைந்தோருக்கு விளங் காது என்பதற்காக பல தப்பான விளக்கங்களைப் பெற்றோரும் சில ஆசிரியர்களும் வழங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீண்ட பயணம் போய்விட்டார் என்று சிலர் சொல்லிக் கொடுக்கிறார்கள். திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் எப்போது திரும்பி வருவார்? என பிள்ளை கேட்கிறது. இதற்குத் தகுந்த பதில் கொடுக்க முடியாது. மழுப்புகிறார்கள். சமயத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் கடவுள் அவரை விரும்பி தன்னுடன் சேர்த்துக் கொண்டார்'' என்று கூறுகிறார்கள். இதைக் கேட்ட பிள்ளைகள் கடவுள் தன்னையும் அப்படி தன்னுடன் இணைத்து விடுவார் என நினைத்து கடவுளுக்குப் பயப்படுகிறார்கள். கடவுளை இயமனாகக் காட்டுவது பிள்ளைகளுக்கு இருக்கும் பயத்தை மேலும் கூட்டுவதாக அமையும். வேறு சிலர் இறந்தவரை நீண்ட நித்திரை கொள்கிறார் எனச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதைக் கேட்ட பிள்ளை நித்திரைக்குப் போகப் பயப்படுகிறது. இறப்பு பற்றிய இவ்வகையான விளக்கங்களை பிள்ளைகளுக்கு வழங்குவதால் அவர்கள் பிழையான சிந்தனையில் ஈடுபட சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறன. எனவேதான் இறப்பு என்றால் அவர் எழும்பி நடக்கமாட்டார். அங்கங்கள் அசைய மாட்டா. பார்க்கமாட்டார். உணவு உட்கொள்ள மாட்டார். உடம்பு சூடாக இருக்காது குளிரும் ஆகிய தொழிற்பாடுகள் செயலற்றுப் போவதை விளக்குவதே சிறந்தது.

தரம் மூன்றில் வாழ்க்கை வட்டங்கள் பற்றியும் தொடந்து உயிரினங்களின் வாழ்க்கை வட்டங்கள் பற்றிக் கற்பிக்கும் போதும் இறப்பின் இயல்பையும் அது தவிர்க்க முடியாதது என்பதையும் விளங்கவைத்து இறப்பை ஏற்றுக் கொள்ள வைப்பதன் மூலம் துயரத்தை ஓரளவு குறைக்க முடியும்.

## கல்விச்சீர் நன்மைகள்

நாளொரு நல்ல குரு – எந்தவொரு
நாளுமோ ஓய்வு இன்றி
போனதாற் பள்ளியிலே – தினந்தினம்
புகட்டிய கல்வியினால்
மாணவர் கற்றுயர்ந்தார் – ஏணி நான்
மகிழ்வது என்னியல்பு
காணிற் பெருமையவர் – உயர்நிலை
கற்றவர் பேரறிஞர்
துள்ளும் எனது மனம் – களிப்புடன்
தொடரும் புகழோசை
தள்ளா வயதினிலும் – எனது கை
தாங்குமோர் கைத்தடியாய்
வருவர் எனவிருந்தேன் – எவருமே
வந்ததில்லைக் காணேன்
தருவர் எனநினைந்தேன் – கல்வி சொல்
தந்ததா அன்பொழுக்கம்
பொத்தகக் கல்வியொடு – பள்ளிகளில்
புகட்டிய தொல்வொன்றும்
வித்தகன் ஆக்கியதோ – சான்றிதழ்
வினாவிடை வங்கிகளோ
அன்பு கருணை மிகும் – ஒழுக்கம்
அடக்கம் கீழ்ப்படிவு
இன்பம் தருவாய்மை – நன்றிசெய்
ஈகைகற் பித்தலி ல்லை
பாடங்கள் சோதனைக்கோ– துயரங்கள்
பரவிடும் கற்றல்களோ
நாடகம் ஆயினதோ– கல்விசீர்
நன்மைகள் தீய்ந்தனவோ!

–உமாபாரதி.

கலாநிதி. வை.அருள்நந்தி.
கிழக்கு பல்கலைக்கழகம்.

## எங்கள் குறிக்கோள்.

மக்களின் உணவை நிறைவுபடுத்துவதிலும் அவர்களின ஊட்டசத்தின் தேவையை ஈடுசெய்வதிலுமாக மரக்கறியின் முக்கியத்து வம் கூடிக்கொண்டே செல்கின்றது. ஆகவே எமது நோக்கம் சூழலின் தரத்தை பாது காப்பதோடு சீராக்கப்பட்ட நடைமுறைகள் செயற்பாடுகள் மூலம் மரக்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டு அவைகள் விநியோகப்படுத் தப்பட்டுக் கிராம நகர் வாழ் ஏழை மக்களின் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்டு அவர்களின வருமானமும் பெருக்கப்படல் வேண்டும் என்பதே யாகும். எமது இந்த நோக்கமானது மேம்படுத்தப் பட்ட மரக்கறிகளின் அபிவிருத்தியாலும் சீராக் கப்பட்ட உற்பத்தி முறைக்கான உற்பத்தித் தொழில் நுட்பங்களாலும் நிறைவடையலாம். மரக்கறி சம்பந்தமான எந்த விதமான ஆராய்ச்சிகளிலும் தெளிவான குறிக்கோள்கள் இருக்கவேண்டும் என்பதும் முக்கியமானதே. சீராக்கப்பட்ட பயிரின் தரம், அதிக விளைச்சல் மரக்கறி உற்பத்தி யாளர்களின் வருமானம் அதிகரித்தல் என பவை பிரதான நோக்கங்களாகச் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். அளவிற்குக் கூடிய பீடைநாசினிகளின் பாவனையால் ஏற்படும் சூழல் மாசடைதல் உடல் நலக்கேடு ஆகியவை பற்றி அறிந்து கொள்வதற் காகவும் உணர்ந்து கொள்வதற்காகவும் மரக்கறி உற்பத்தியில் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம் (Integrated Pest Management) அமைக்கப்பட்டுக் கடுமையாக அமுல் நடத்தப் பட வேண்டும்.

வேளாண்மைக்கல்விக்கு ஒரு விவரணம் என்னும் நூலிலிருந்து....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

–மாவுறையூரான்–


# பொம்மலாட்டம்



# ஒரு கற்பித்தல் ஊடகம்

1985ம் ஆண்டிலிருந்து ஆரம்ப வகுப்புகளில் பொம்மலாட்டத்தை ஓர் அழகியல் அம்சமாக அறிமுகப்படுத்தும் திட்டத்தைப் பாடவிதான அபிவிருத்திச் சபையினர் மேற் கொண்டனர். அதன் முன்னோடிச் செயற்பாடாக 1984ம் ஆண்டு நாடு தழுவிய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்குப் பொம்மலாட்டம் தொடர்பான பயிற்சிகளையும் கருத்துக்களையும் வழங்க வேண்டுமென அமரர் கலாநிதி சிரோன்மணி இராசரத்தினம் அவர்கள் தீர்மானத்தார்.

அதனை நோக்காகக் கொண்டு சி.நாகராஜா அவர்களுடன் சிரோன்மணி இராசரத்தினம் அவர்கள் கலந்தாலோசித்தார். பொம்மலாட்டத்தை அகில இலங்கை ரீதியில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கும் ஆசிரியர்களும் அறிமுகம் செய்தார். அந்தச் சிறப்பான செயற்பாட்டினால் மேலும், ஊக்கம் பெற்ற பொம்மலாட்ட வித்தகர் அதிபர் சி.நாகராஜா அவர்கள் பொம்மலாட்டத்தை யாழ்.மாவட்டப் பாடசாலைகளில், கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளினூடாக மாணவர்களிடம் சென்றடையச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் கொண்டார். பொம்மலாட்டத்தைக் கற்றல் கற்பித்தல் ஊடகமாகக் கொள்வதில் நாகராஜா அவர்கள் கொண்டிருந்த விருப்பத்தைப் போன்றே அமரர்.இ.சிவானந்தன் அவர்களும் பொம்மலாட்டத்தைப் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் ஊடகமாக்கி மாணவர் ஆற்றலை மேம்படுத்த வேண்டும் என விரும்பினார். அதற்கென வழிகாட்ட உகந்ததொரு நூலை உருவாக்கவும் அவர் ஊக்கம் வழங்கினார்.



திரு சி.நாகராஜா
இளைப்பாறிய அதிபர்

குடாநாட்டின் கல்வியாளர்களின் ஒன்றுகூடலால் பொம்மலாட்டச் செயலமர்வுகளையும், கருத்தரங்குகளையும், ஆசிரியர்களுக்கும் ஆசிரிய ஆலோசர்களுக்கும் வழங்கவேண்டுமென்ற தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் பயிற்சிக்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் அழகியற்றுறை சார்ந்த வல்லுநர்களுக்கும் "பொம்மலாட்டம்" என்னும் வள நூலுக்குரிய உள்ளடக்கத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் பயிற்சிகள் பயன்தரும் என்ற நம்பிக்கையும் முன்வைக்கப்பட்டது.

பொம்மலாட்டக் கலை வல்லுநரான சி.நாகராஜா அவர்கள் தனித்தே பொம்லாட்ட நூலை ஆக்கி வெளிக்கொணரும் சகல ஆற்றல்களும் பெற்றவராக இருந்தபோதும், யாழ்.மாவட்ட சூழலுக்கும் வளங்களுக்கும் ஏற்புடையதாகவும், நடைமுறைச் சாத்தியமும் இயங்கும் நிலை உறுதியும் ஏற்படும் வகையில் செயலாற்றிப் பெறப்படும் அனுபவ வெளிப்பாடுகளின் தொகுப்பாக நூலை வெளிக்கொணர வேண்டும் என விரும்பினார். பயிற்சியின் அனுபவங்களையும் சேர்த்து யதார்த்த நிலைப்பலத்துடன் நூலை ஆக்குவதில் அவரின் கவனம் மேலோங்கி நின்றது. ஆரம்ப ஒன்றுகூடலில் கலந்து கொண்டோர் அனைவரினதும் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்தமை அவரை மேலும் உற்சாகப் படுத்தியது.

1988ம் வருடம் மே மாதம் 30,31 யூன் மாதம் 1,2 ஆகிய தினங்களில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் பொம்மலாட்டப் பயிற்சிகள் வதிவிட வசதிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் இ.சிவானந்தன்
கல்விப்பணிப்பாளர்

இடம் பெற்றன. இப்பயிற்சிக ளில் இணைந்து கொண்டு தமது திற மைகளையும், புதிய நுடபங்களையும் வெளிக காட்டிச் செயற்பட்ட வர்கள் பலர், தம் மைப் பொம்மலாட் டக் கலைஞர்களாக இனங்காட்டினர்.

யாழ்ப்பாண மாவட்டப் பிரதம கல்விப் பணிப்பாள ராக அன்றிருந்த கு.சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் அந்நாள் அதிபர் திருமதி ஏ.இராசரத்தினம் அவர்களின் வரவேற்புரையுடன் 1988 மே 30ம் நாளில் பயிற்சிகளும் செயலமர்வுகளும் ஆரம்பமாயின.

பொம்மலாட்ட நூலக இணைப்பதிகாரியாகவிருந்த அமரர் இ.சிவானந்தன் அவர்கள் பயிற்சியின் நோக்கம் பற்றி அன்று விளக்கிக் கூறினார்.

"கல்வியின் விருத்திக்கு அழகியல் சொரியும் வழிகாட்டல்களே மாணவர் கற்றலை மேம்படுத்தும், அந்தச் சீர்தரும் வரிசையில் பொம்மலாட்டம், சிறுவர் களை மாத்திரமல்ல பெரியவர்களையும் ஈர்க்கும் பலம் வாய்ந்தது" என்றார். அவரது கருத்துக்கள் உயிர்ப்புறும் வகையில் தொடர்ந்த நான்கு நாள்கள் செயலமர்வும் கருத்தரங்கும் வளவாளர்களையும் பங்கு கொண்ட ஆசிரியர்களையும் பொம்மலாட்டச் சுழற்சிக்குள் ஈர்த்து நின்றதெனலாம்.

இப்பயிற்சியின் வளவாளர்களான பொம்மலாட்ட வித்தகர் சி.நாகராஜா அவர்களுடன் ஆரம்பக் கல்வி வள ஆளணி, உறுப்பினராகவிருந்த அதிபர் க.நடராஜா அவர்கள் அந்நாளில் புலோலி வேலாயுதம் மகாவித்தி யாலயத்திற் கடமையாற்றியவர். சி.நாகராஜா அவர்க ளின் பொம்மலாட்ட வடிவமைப்பிற்கும் உருவாக்கத்திற் கும் பெரிதும் உதவினார்.

முன்னாள் பாடவிதான அபிவிருத்தி நிலைய எழுத்தாளரும் கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பதிப்பாசிரியருமான நா.சுந்தரலிங்கம் அவர்கள் தமது அரங்கியற் புலமை மூலம் பெற்ற நாடக அனு பவத்தாலும், சிறுவர் கல்வி மீது கொண்ட ஆர்வத்தா லும் பொம்மலாட்ட அரங்கேற்றத்தில் புதுமைகளை விரும்பிச் செயற்பட்டார். இவர் பிற்காலத்தில் கல்விப் பணிப்பாளராக தீவகக் கல்விக் கோட்டத்திலும், யாழ்ப்பாண வலயத்திலும் பணியாற்றினார். இவர் ஓய்வு பெற்ற பின்னர் அண்மையில் கொழும்பில் காலமானார். அவரது கலைச் செழுமை மிக்க ஆற்றல்கள் பொம் மலாட்டக் கலைப் புதுமைக்குத் துணை செய்தன.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைப் பேராசிரி யர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் பங்கு இங்கு பலராலும் விதந்துரைக்கப்படுகின்ற சிறப்புடைய தாகும். நகைச்சுவையும் நாடக அரங்க வண்ணங்களும் அவர் மூலம் பொம்மலாட்ட வளத்தை புனரமைக்கவும் எளிமைப்படுத்தி எல்லோர் மனங்களையும் ஈர்க்கவும், வழிகாட்டின. பேராசிரியரின் ஆற்றல்களை விளக்கும் வார்த்தைகள் எம்மிடத்தில் இல்லையெனலாம்.

அன்று உலோக வேலைத் திறன் ஆசிரியராக யாழ்.வண்ணார் பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் பணிபுரிந்த செ.செல்வராஜா அவர்கள் பொம்மலாட்ட வடிவமைப்பில் நவீனத்துவத்தையும், பொம்மலாட்ட அசைவு நிலைகளில் தொழில் நுணுக்கங்களையும் சேர்த்துக் கொள்வதில் திறமை காட்டினார். இவர் ஒரு நாடக வியலாளர். சிறந்த ஆரம்பக் கல்வி ஆசிரிய வழிகாட்டி. பல்துறை வளஞ்செறிந்த அன்றைய இளை ஞன். இன்று ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தில் வன்னிப் பெருநிலத்தின் கல்விச் செயற்றிட்ட உதவியாளராகப் பணிபுரிகின்றார். முல்லைத்தீவு வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர்.

பிரபலம் பெற்ற சித்திர ஆசிரியர்களும், வட மாநிலம் புகழ்ந்து போற்றும் ஓவி யக் கலைஞர்களுமான அமரர் அ.மார்க்கு அவர் களும், திரு.செ.சிவப் பிரகாசம், திரு.வி. எஸ். சண்முகராஜா, திரு.ம. அன்ரன் யோசப் ஆகி யோரும் வளவாளர் களாய்ப் பணியாற்றினர். அவர்கள் ஒவ் வொருவ ரும் செயலமர்வையும், கருத்தரங்குளையும், உணாவுபூர்வமாக ஒழுங் குறத் திட்டமிட்டுச் செயற் படுத்துவதல் தனித்து வம் மிக்க ஓவியக் கலைஞர்கள் என்பதை உணர்த்தி நின்றனர்.



திரு செ.செல்வராஜா
கல்வி உதவிப் பணிப்பாளர்

பொம்மலாட்டக் கருவிகள், பொம்மலாட்டப் புனை கதை வடிவங்கள் என்பவற்றை ஆக்குவதில் இவர்க ளின் பங்கும் பயிற்சியும் மேலானவையாகும்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் தமது பல்துறை சார்ந்த ஆற்றல்களாலும், விசேடமாக எழுத்தாற்றல், நாட்டுக் கூத்து, நாட்டார் பாடல், கும்மி, கோலாட்டம் போன்ற கலைத்துறை விவேகத்தாலும், பொம்மலாட்டத்தின் மேம்பாட்டுக்கு உன்னதமான பங்காற்றினார். இத்தகைய வித்தகர்களைப் பயிற்சி வளவாளர்களாகக் கொண்டு நடைபெற்ற செயலமர்வுகளில் உதவியாளர்களாகப் பின்வருவோர் செயலாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிகழ்ச்சி உதவியாளர்கள்.**

யாழ்.இந்துக்கல்லூரியில் கடமையாற்றிவரும் யாழ்.கல்விவள நிலையத்தின் ஆரம்பக் கல்வி வளமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் அந்நாள் செயலாளருமான திரு.பி.நடராஜா, மடத்தில் இயங்கிவந்த யாழ்.கோட்டக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றியவருமான திரு.யே.யேசுதாசன், யாழ். நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு.சி.செல்வரத்தினம் ஆகியோருடன் நாடக அரங்கில் மாணவர்களான -

திரு.சி.ஜெயசங்கர், திரு.ப.இரகுநாதன், செல்வி.தி.செல்வநிதி ஆகியோர் நிகழ்ச்சி உதவியா ளராக இணைந்துகொண்டு பொம்மலாட்டச் செயலமர்வு சிறந்த பயன்தரும் நூலை வெளிக்கொணர உதவினர்.

இக்கருத்தரங்கில் பயிலுநர்களாகப் பின்வரும் அன்றைய ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடசாலையி லிருந்து பங்கு கொண்டனர்.

1. திருமதி எஸ்.சச்சிதானந்தமூர்த்தி.
   யா/தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் பாடசாலை.
2. திருமதி சி.தருமலிங்கம்.
   யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்.
3. திருமதி எம்.ரீ.ஆ.யோன்.
   யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.
4. திருமதி க.தாமோதரம்பிள்ளை
   யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.
5. திருமதி இ.பாலசுப்பிரமணியம்
   யா/எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
6. திருமதி எம்.மனோகரன்
   யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.
7. திருமதி ம.பத்மநாதன்
   யா/மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்.
8. திருமதி க.இராஜசிங்கம்
   யா/முல்லைத்தீவு இந்துத் தமிழ்க் கலவன் வித்தியாலயம்.
9. திருமதி.கோ.லோகநேசன்
   யா/வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் கலவன் பாடசாலை.
10. திருமதி அ.அருளானந்தம்
    யா/அளவெட்டி வடக்கு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.
11. திருமதி அ.மகேந்திரன்
    யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
12. திருமதி வே.மகேசு.
    யா/புனித யோன் பொஸ்கோ வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
13. செல்வி ப.தம்பிராசா
    யா/உடுவில் மகளிர் கல்லூரி.
14. செல்வி இ.இராசமலர்
    யா/புனித திரேசா மகளிர் கல்லூரி அச்சுவேலி.
15. செல்வி ஸ்ரீ.விசுவலிங்கம்
    யா/வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்.
16. செல்வி இ.செ.றோ.சுவாம்பிள்ளை
    யா/உடுவில் மகளிர் கல்லூரி.
17. செல்வி.த.ஜீவரட்ணம்
    யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
18. செல்வி.சி.தேவநாயகி
    யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
19. செல்வி ந.தம்பாப்பிள்ளை
    யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.
20. செல்வி நா.இராசையா
    யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
21. செல்வி கே.அப்புத்துரை
    யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
22. திரு இ.கணேசராசா
    யா/ஏழாலை மகாவித்தியாலயம்
23. திரு ப.க.ஞானசுந்தரம்
    யா/நயினாதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம்.
24. திரு.பொ.இரா.நடராசன்
    யா/மானிப்பாய் விவேகா நந்தா வித்தியாலயம்.
25. திரு.க.கணேசலிங்கம்
    யா/ஆனைக்கோட்டை றோ.க.வித்தியாலயம்.

இவர்களிற் பலர் தற்போது ஓய்வு பெற்றிருக்கலாம். அல்லது வேறு பாடசாலைகளுக்கு மாற்றலாகிச் சென்றிருக்கலாம். இவர்களின் உற்சாகமான விருப்பு மிகும் ஒத்துழைப்பில் பொம்மலாட்டப் பயிற்சிகள் அழகும், பொருளும், அறிவும் பெருக நான்கு தினங்கள் நடைபெற்றன.

இப்பொம்மலாட்டச் செயலமர்வினால் விளைந்த "பொம்மலாட்டம்" என்ற நூலைப் பற்றி அறிய அடுத்த "விளக்கு" தாளிகையை எதிர்பாருங்கள்.

THULIRGHAL
201/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA

**ஆண்டாண்டு காலமாய் அழுகின்ற ஏழைக்கு அறுசுவை உணவு வேண்டும். ஆணவக்காரர் நெஞ்சிலே தாம் என்ற அறியாமை நீங்க வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கல்வியில் இன முரண்பாட்டின் தலையீடுகள்

கட்டுரை

ஈழத்தமிழர்கள் அதிக அளவில் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாக வடமாகாணத்தின் யாழ்.மாவட்டம் திகழ்கின்றது. தொன்மையான, தொடர்ச்சியான கல்விப்பாரம்பரியம் நிலவி வருகின்றமைக்கான சான்றுகள் பல அங்கே உள்ளன. இதனைக் கட்டிக் காத்த யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் ஆரம்பகாலம் முதலே சமயத்தின் பால் கட்டுண்டு, அதன் மரபுகளைப் பேணிக் காத்துவருகின்ற பெருமையைப் பெற்று விளங்குகின்றனர். திண்ணைக்கல்வியும், குருகுலக் கல்வி முறையும் மேலைநாட்டின் ஆதிக்கத்தினாலும், ஆங்கிலேய மிஷனறிகளின் தாக்கத்தினாலும் மாற்றங்களுக்கு உட்படத் தொடங்கின. கி.பி.1690 இல் கிறிஸ்தவ பாடசாலைகள் அதிக அளவில் தோற்றம் பெறலாயின. இந்த நிலையிலேயே இந்து மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதில் இந்து சமயத்தைச் சேர்ந்த சமயப் பெரியோர்களும், மத நிறுவனங்களும் கூடிய அக்கறை கொண்டிருந்தன. இக்காலத்தே சமயமும், கல்வியும் இணைந்து வளர்ந்தன.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஆரம்ப வரலாறுகளின் தரிசனம் சமயத்தின் சுவடுகளைச் சுட்டி நிற்கின்றன. ஆரம்ப காலத்தே மதமாற்றங்களுக்கான களங்களாகிய பாடசாலைகள் மாணவர்களின் மொழிவளம் உள்ளிட்ட கல்வி நிலை உயர்ச்சிக்கு வழிசமைத்தன. கிறிஸ்தவ மரபிலே பாடசாலைகளின் வளர்ச்சி உச்சமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவ பாடசாலைகளும், சைவப்பாடசாலைகளும் ஏககாலத்தில் இங்கு செல்வாக்குச் செலுத்தியமைக்குச் சான்றாக யாழ்.கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், உயரப்புலம் மெதடிஸ்த வித்தியாலயம், கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலயம், நாவலர் மகாவித்தியாலயம் மற்றும் யாழ்.இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகளைக் கூறலாம்.

1869 இல் பொதுப் போதனைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, பாடசாலைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை தென்னிலங்கையுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றிலும் கற்றல் கற்பித்தலுக்கான வளங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. வசதிகுறைந்த ஒதுக்குப்புறங்களிலுள்ள கிராமங்களிலே பாடசாலைகள் அமைக்கப்படவில்லை. இதனால் வசதி படைத்தவர்கள் நகர்ப்புறம் நோக்கித் தள்ளப்பட கிராமிய வறியவர்கள் கல்வியில் கீழ் நோக்கித் தள்ளப்பட்டனர். பாடசாலைகளின் சமனற்ற பரம்பல் அக்காலக் கல்வியைப் பெரிதும் பாதித்தது எனலாம்.

சுதந்திரத்துக்குப் பின் 1960 களிலிருந்து அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளத் தொடங்கியது. ஆனாலும் அரசின் செயற்பாடுகள் யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கல்வியிற் பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. இனவாதம் (**racism**) என்ற பெயரில் அரசின் கையில் பாடசாலைகள் மீதான ஏகாதிபத்தியம் கிட்டியது. நிதிவழங்கல் ஆசிரியர் நியமனம், வளப்பகிர்வு என்பவற்றிலே பல மாறுபட்ட முறைமைகள், உபாயங்களை அரசு கையாண்டது. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தே யாழ்.மாவட்டத்தில் கல்வி நிலைமை எவ்வாறு காணப்பட்டது என்பதற்கு பின்வரும் 4 விடயங்களை குறிகாட்டிகளாக முன்வைத்து அதன் போக்கினை (**Trend**) எடுத்துக்காட்டலாம்.

- கல்வியினால் சமூகத்திலே அதன் தளங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது.
- அந்த மாற்றங்களின் விளைவால் சமூக மேம்பாட்டினை எய்தியுள்ளது.
- கல்வி நிலையில் அசாதாரணமான வீழ்ச்சியினை எதிர் கொண்டுள்ளது.
- கல்வி நிலையானது சமமான செயற்பாட்டுடன் காணப்படுகிறது.

1970 இலே இடம் பெற்ற பொதுத் தேர்தல் யாழ்.மாவட்டக் கல்வி நிலைமையில் ஒரு சடுதியான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. கிராமப்புறங்களில் விவசாயத்திலீடுபட்ட இளைஞர்கள் அக்காலத்தே ஏற்படுத்தப்பட்ட இறக்குமதிகள் கட்டுப்பாட்டினால் விவசாயத்திலே அதிக அளவில் ஈடுபட அவர்களின் வருமானத்தின் பெருக்கம் கிராமிய மாற்றங்களுக்கு வழி சமைத்தது. இதனால் அவர்களின் பாரம்பரியமான மனோபாவம் (**Attitude**) ஒரு மாற்றத்தை எதிர் கொண்ட வேளையில் அவர்களின் சமுதாயத்தில் மத்தியில் மாற்றத்துக்கு வழியேற்பட்டது. இந்நிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ளவர்களின் கல்வியிலே ஒரு பன்முகப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது. படித்த இளைஞர் சமுதாயம் ஒன்று இங்கு உருவாகத் தொடங்கியது. பல்கலைக்கழகங்களிலே யாழ்.மாவட்ட மாணவர்களின் பிரவேசம் அதிகமாகக் காணப்பட்டது.

1974இல் பெரும்பான்மையின அரசால் ஏற்படுத்தப்பட்ட நுழைவுக்கட்டுப்பாடும் மொழி வாரியான தரப்படுத்தலும் இந்தப் பிரதேச மாணவர்களிடையே கடும் போட்டியை ஏற்படுத்தியமையால் கற்றறிந்தோரின் வீதம் அதிகரித்தது. அரசின் பாரபட்சம் மாணவர்களின் கல்விக்கு ஓர் ஊக்கியாக (**motive**) அமைந்தது. இதன் பெறுபேறாக யாழ். மாவட்டத்திலே தனியார் கல்வி நிலையங்கள் உதயமாகின. வர்க்க முறையானது கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கீழ் நிலையிலே பல குடும்பங்கள் கல்வி வளத்தைப் பெருக்கிக் கொண்டதால் உயர்


**பரரஜசிங்கம் இராஜேஸ்வரன்**
**ஆசிரியர்**
**யா\சரவணை சின்னமடு றோ.க.த.க பாடசாலை**


தொழில்களைப் பெற்றுக்கொண்டனர். இது சமுகத்திலே ஒரு வெளிப்படையான முன்னேற்றத்தை ஏற்படுத்தின. இந்தக் காலப்பரப்பினை அண்டியே யாழ். பல்கலைக்கழகமும் தோற்றம் பெற்றது. மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு கற்றலுக்கு முதன்மை கொடுப்பதாக அமைந்தது. பெண்களின் கல்விக்கான சந்தர்ப்பங்கள் முன்னரைவிடச் சற்று அதிகரித்துக் காணப்பட்டன. இதனால் பெண் நிலைக் கல்வியும் முதன்மை பெறச் சமூகத்திலே கிராமிய மேம்பாடு பற்றிய கருத்து நிலையும் முதன்மை பெறத் தொடங்கிற்று.

இனக்கலவரங்களின் விளைவு பெரும்பான்மை அரசியல் வாதிகளின் பகைமையிலமைந்த முற்கற்பிதங்களும் எமது மாவட்டக் கல்வி நிலையின் வீழ்ச்சிக்குப் பெரும் காரணிகளாயின. மாவட்ட அடிப்படையிலான கோட்டா முறை எமது பிரதேச மாணவர்களின் பல்கலை அனுமதியில் குறிப்பாக மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளுக்கான மாணவர்களின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைத்தது. பல்வேறு காரணங்களைக் காட்டி க.பொ.த (சாதாரண)பரீட்சையினை நடைபெறாமற் செய்தமையும் பின் வந்த காலங்களில் மாணவர்களிடையே குழப்பநிலைகளைத் தோற்றுவித்துப் பரீட்சைகளை மீண்டும் நடத்துவது வழமையான நிகழ்வுகளான இத்தொடரும் நிலையானது கல்வியின் வீழ்ச்சிக்கு காலாகியது. யுத்த காலங்களில் ஏற்பட்ட இடம் பெயர்வுகளும், பாடசாலைகளின் அழிப்பும், மாணவா களின் இறப்பும் கற்றலுக்கான ஸ்திரமான சூழலின்மை யும் மேலதிக காரணிகளாகின. அழிந்து போன பாடசாலைகளால் மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவே நிறுத்திக் கொண்டமையும் அவற்றினை அதிகாரிகள் கவனத்திற்கு கொள்ளாமையும் கல்வி நிலை தாழ்வடையக் காரணமாயிற்று.

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியிலான புள்ளி விபரங்கள் மூலம் எமது மாவட்டத்தில் நாற்பது **1AB** பாடசாலைகளும், முப்பத்தேழு **1C** பாடசாலைகளும், வகை இரண்டில் (**Type - 2**) 176 பாடசாலைகளும், வகை மூன்றில் 227 பாடசாலைகளுமாக 480 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றில் வகை இரண்டு, வகை மூன்று பாடசாலைகளே அதிகம் காணப்பட்ட நிலையும் கூட எமது மாவட்டக் கல்வித்தரத்தின் பின்னடைவுக்கு ஒரு காரணி எனலாம். அடிக்கடி இடம்பெறுகின்ற யுத்தம் மாணவர்களின் கல்வியில் ஏற்றத்தையும் மாறி மாறி இறக்கத்தையுமே இன்று வரை கொடுத்து வருகின்றது. சமூக மாற்றங்க ளுக்கு ஏற்ப எமது புலத்தில் நேரான விளைவுகளை விட எதிரான அல்லது மாறான நிலையே அதிகமாகக் காணப்படுகின்றது. கல்விக்கான இருப்பு என்பது இன்று கேள்விக்கான விடயமாகிவிட்டது. இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் அறிவார்ந்த, ஆக்கபூர்வமான செயற்பாடுகள்தான் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கு வழிசமைக்கவேண்டும்.

காலனித்துவ காலம் முதலே இலங்கையில் வாழ்கின்ற பெரும்பான்மை இனத்தவருக்கும், சிறுபான்மை இனத்தவருக்குமிடையே ஏதோவோர் வித்தில் முரண்பாடுகள், விரோத மனப்பான்மைகள் தொடர்ந்து கொண்டே வருகின்றன. குறிப்பாக, இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு நிலையினை அரசு திட்டமிட்டும், கல்விக் கொள்கைகள் ஊடாக வளர்த்தும், கூர்மைப்படுத்தி வருகின்றமை வரலாறு கண்ட உண்மையாகிவிட்டது. இதன் விளைவு வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கல்வி சார் கட்டமைப்பும் பின்னிலை நோக்கிய விருத்தியினை சந்திக்கலாயிற்று. இன ரீதியான பாகுபடுத்தல்கள் (**Racial segregations**) கல்வியிலே அரசியலின் ஊடுருவலை மேன்மேலும் வளர்த்துக்கொண்டே இருக்கின்றது. சற்று ஆழமாகப் பார்த்தால் இன்று யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலையில் இனத்துவ முரண்பாடு ஏற்படுத்திய செல்வாக்கு பருநிலையான நுண்நிலையான ஒப்பீடுகளை மேற்கொள்ள சமூக, அரசியல் கல்வியிய லாளர்களுக்கு ஆர்வத்தினையும், அக்கறையையும் ஏற்படுத்திவிட்டது.

"தேசிய கலாச்சாரப் புனருத்தாரணம் செய்தல்" என்ற நோக்கத்தை முன் வைத்து, மறைமுகமாக சிங்கள உயர்குடிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியினை மையமாகக் கொண்டு மிஷனறிப் பாடசாலைகளை மாதிரியாகக் (**Model**) கொண்டு உருவாக்கப்பட்டன. இவை பெரும்பான்மையினருக்குப் பாடசாலை மட்டும் உரியனவாக அமைந்தன. இந்த நிலையிலேயே இதே நோக்கங்களை முன்வைத்து தமிழர்களுக்காக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது.

கலவி வசதிகளின் பரவலாக்கல் இலங்கையின் கூட்டுணர்வு ஐக்கியத்துக்குப் பதிலாக முரண் பாடுகளை இனங்களுக்கிடையே வளர்ப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. 1920 களில் சுயபாஷைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட இது வழிவகுத்தது. ஆங்கிமொழி மீதான புறக்கணிப்பும் தனிச்சிங்களச் சட்டமும் தமிழ் மாணவர்களுக்குக் கல்வி மீதான பழிவாங்கல்களுக்கு வழிவகுத்தன.

1970 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலும் அதற்குப் பின்னரான நிலைமைகளும் யாழ்.மக்களின் கல்வியிலே ஒரு பன்முகப்பட்ட தாக்கத்தினை ஏற்படுத்தியது. இந்த நிலையில் அப்போது ஆட்சியிலிருந்த பெரும்பான்மை இன அரசு பொறியியல் மருத்துவம் ஆகிய துறைகளுக்குக் கூடுதலான தமிழ் மாணவர்கள் தகைமை பெறுகிறார்கள் என்பதைக் கருத்திற் கொண்டு மொழிவாரியான தரப்படுத்தலைக்கொண்டு வந்தது. அதாவது 1973 இலேயே தமிழ் மாணவர்களின் உயர்கல்வியிலே கைவைத்த அரசு திறமை அடிப் படையை நிராகரித்து இனத்துவ அடிப்படையில் பல் கலைக்கழக நுழைவை ஏற்படுத்த மொழி மூலமான தரப்படுத்தலை கைக்கொண்டது.

அடுத்த நிலையில் மாவட்ட ரீதியான கோட்டா முறையையும் அனுமதித்தது, இதன் விளைவு 1969 இல் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத் துறைசார்ந்த புலங்களில் தமிழ் மாணவர்கள் 27.5% வரை காணப்பட்டனர். 1974 இல் தரப்படுத்தலின் பின்னான நுழைவுக் கட்டுப்பாடுகளுக்குப் பின் 7.0% மட்டுமே காணப்பட்டனர். இவ்வாறான இனஞ்சார் நடவடிக்கை களுக்காக ஏற்பட்ட ஒதுக்கீடுகளில் காட்டப்பட்ட அரசியல் மாற்றம், இனவேற்றுமை மிகையாக இடம்பெற எமது பிரதேச மாணவர்கள் மத்தியில் உறுதியற்ற மனப்பான்மையும், அரசின் மீது வெறுப்பும் படிப்படியாக ஏற்படக் காரணமாயிற்று. இதன் ஒரு வடிவமாகவே விடுதலைப்போராட்டம் தோற்றம் பெற்றது.

மாவட்ட அடிப்படையிலான கோட்டா முறைமை, பின்தங்கிய மாவட்ட அடிப்படை என்றமாறுதல்கள் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியில் பெரும் வீழ்ச்சியை சிங்கள மாணவர்களுடன் ஒப்பிடும் போது கண்டது. இத்தகைய பிரேரணைகள் எமது பிரதேசக் கல்வி மேம்பாட்டில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியமை தவிர்க்க முடியாததாக அமைந்தது. மாவட்டக் கோட்டா அடிப்படையில் -

55 சதவீதமும், தீவளாவிய திறமையின் அடிப்படை யில் 40 சதவீதமும் கல்வியில் பின்தங்கிய மாவட்டத்தின் தன்மையில 5 சதவீதமும் வழக்கமாகப் பல்கலைக்கழக அனுமதியில் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையாகும். ஆனால் 1973 இல் தமிழ் மாணவர்களின் பொறியியல் நெறிக்கான அனுமதி 24 வீதத்திலிருந்து 1974 இல் 16.3 வீதமாக வீழ்சியடைந்தது. மாவட்ட அடிப்படையிலான கோட்டா வெட்டு 1993 - 1994 முதல் 2003 - 2004 வரை பொறியியல் துறைக்கு அனுமதி பெறும் மாணவர்களின் (யாழ்.மாவட்டம்) எதிர்பார்ப்புக்கு மாறாக எவ்வாறு இருந்து வருகின்றது என்பதனை கீழ்வரும் அட்டவணை விளக்கி நிற்கிறது.

| ஆண்டு | உண்மையில் எடுக்கப்பட்டது | எண்ணிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது | சதவீத அடிப்படையில் எடுக்கப்பட்டது | இலங்கை முழுவதுமான மாவட்ட கோட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1993 - 1994 | 42 | 42 | 42 | 485 |
| 1994 - 1995 | 23 | 42 | 39 | 452 |
| 1999 - 2000 | 34 | 42 | 45 | 521 |
| 2000 - 2001 | 33 | 42 | 49 | 571 |
| 2001 - 2002 | 34 | 42 | 51 | 584 |
| 2002 - 2003 | 36 | 42 | 50 | 577 |
| 2002 - 2003(A) | 37 | 42 | 50.1 | 580 |
| 2003 - 2004 | 27 | 42 | 50.1 | 580 |

(மூலம்:- கல்விக்களம் - உதயன் பத்திரிகை 2004)

இங்கு 1993 - 1994 கல்வியாண்டில் யாழ்.மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டி ருந்த போதும் மாவட்ட கோட்டா அனுமதியும் பின் தங்கிய மாவட்ட கோட்டா அனுமதியும் சேர்ந்து நாற்பத்தி இரண்டிலும் (42) அதிகமாகவே அமைந்திருக்க வேண்டும். ஆனால் அக்கல்வியாண்டில் அவ்வாறான எந்த நிலையும் காணப்படவில்லை. இதன் விளைவால்தான் பிரதேசரீதியான எதிர்ப்பு வாதங்களும், இன முரண்பாடுகளும் உச்சமாக அதிகரிக்கத் தொடங்கி இளஞ்சமுதாயத்தினரிடையே வன்போக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க அடித்தளங்கள் இடப்பட்டன.

1990 களுக்குப் பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற வகையில் இராணுவப்பாதுகாப்புப் படையினரால் யாழ்.மாவட்டத்தின் 30 வீதமான பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் அடங்கியுள்ள 40 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன. அவற்றுள் சில ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து வளங்கள் அற்ற நிலையில் நெருக்கடிகளுடன் இயங்குகின்றன. இத்தகைய நிலைக்கு அரசின் திட்டமிட்ட செயற்பாடே காரணமாக அமைகிறது.

பாடசாலைகளுக்கான நிதி வள ஒதுக்கீடுகள் வழங்கல்களில் காட்டப்படுகின்ற பாரபட்சங்கள் மாணவர்களின் இயல்பான கற்றலுக்கு ஆசிரியர்களின் வாண்மையான கற்பித்தலுக்கும், தடைக்கற்களாக காணப்படுகின்றன. மாணவர்களின் கைதுகள் கல்விசார் உத்தியோகத்தர் மீது மேற்கொள்ளப்படும் பயங்கரவாத துஷ்பிரயோகங்கள் பாடசாலை மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் விமானத்தாக்குதல்கள் யாவும் ஒரு இனத்துவ முறையின் கொடிய இல்லாது ஒழித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளேயாகும். இத்தகைய அசாதாரண செயற்பாடுகளால் தான் இலங்கையிலேயே கல்விநிலையில் முதன்மையாக இருந்த எமது மாவட்டம் இன்று பதினான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

வறுமையின் ஏகாதிபத்தியம் நிலவுதல், பின்தங்கிய கிராமங்களின் கீழ் நிலை, படிப்பறிவற்ற சமூதாய உருவாக்கம் பிற இனம் மீதான நிரந்தர காழ்ப்புணர்வு, மாறாத மனவடுக்கள் போன்ற இன்னோரன்ன அம்சங்களை இந்த இன முரண்பாடு ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றது. எது எவ்வாறு ஆயினும் இனங்களுக்கு இடையிலான நல்லுறவுகளை சமயோசிதமாகப் பேணி முரண்பாடுகளைக் களைந்து பெரும்பான்மை சிறுபான்மை என்ற திரையினைக் கிழித்து அறிவார்ந்த ரீதியில் சமவாய்ப்புகளைப் பகிர்ந்து கொடுப்பதன் மூலமாக இனிவரும் சமுதாயங்களாவது சுபீட்சமுடன் வாழ வழி ஏற்படுத திக்கொடுக்க அரசுகள் முன்வரவேண்டும்.

கலாநிதி. வை.அருள்நந்தி.
கிழக்கு பல்கலைக்கழகம்.

# சில சிந்தனைகள்

பயிர்களை எமது நாட்டில் பயிரிடுவதற்கான நிலப்பரப்பு 1.2 மில்லியன் ஹெக்டயராக தொடர்ந்தும் இருந்து கொண்டிருக்கும் வேளை, வருடாந்தம் 1.7 சதவீத அதிகரிப்பால் மக்கட் தொகை தற்பொழுது (2000ஆம் ஆண்டளவில்) 20 மில்லியனாகும். உற்பத்திக்கான நிலப்பரப்பு குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்படாவிட்டாலும் சாதுரியமான முறையில் இயற்கை வளங்களான நிலம்,நீர்,காலநிலை போன்றவற்றை ஆய்வுக் குட்படுத்தி விளைச்சலை அதிகரிக்காவிட்டாலும் நுகர்வோருக்கு நன்மை பயக்கும் ஊட்டச்சத்தைகொடுக்கக்கூடியதும் இலாபகரமான முறையில் உற்பத்தி செய்யக் கூடியதும் உள்ளூர் தேவைகளுக்கு அதிகம் கிராக்கி கூடியதுமான தரம் வாய்ந்த மரக்கறிகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும். மிக முக்கியமானது யாதெனில் மரக்கறிகளை மிகத்துரிதமாக(உடனடியாக) பதப்படுத்தி வைக்கும் தொழில் பயனளிக்கப் போவதில்லை. அத்துடன் கிராம மட்டத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்படாதவரையும் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படாத வரையும்,ஏழை மக்களின் வருமானம் அதிகரிக்கப்படாத வரையிலும் அவை பயன் அளிக்கப்போவதில்லை. மேலும் விண்வெளிப்பயணம் சாதாரண நிகழ்வாக மாறிவிட்ட இந்த யுகத்திலே ஊட்டச்சத்தைச் கொடுக்கும் நுண்ணங்கிகளின் பாரிய குறைபாட்டினால் பெரும் தொகையான மக்கள் நோயுள்ளவர்களாகவும். குருட்டுத்தன்மையுடையவர்களாகவும் மாறிவருவது தாங்கிக்கொள்ள முடியாத விஷயமாகும்.

வேளாண்மைக்கல்விக்கு ஒரு விவரணம்என்னும் நூலிலிருந்து-
இதழாசிரியர்.

THULIRGHAL
201/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.

அதி திட்டமிடல் அதிக அளவு வெற்றிவாய்ப்புக்களையும் குறைந்த அளவு திட்டமிடல் குறைந்தளவு வெற்றி வாய்ப்புக்களையும் பெற்றுத்தரும். அப்படியானால் திட்டமே இடப்பட்டாதவைகளின் கதி என்ன?

– சண் சூ இன்.

THULIRGHAL
201/1, OLR AVENUE,
3RD CROSS STREET,
JAFFNA.

பின்வாங்கி ஓடுவது போல் பாவனை செய்யும் எதிரியைத் துரத்திச் செல்ல வேண்டாம். கூர்மையான மன எழுச்சியுடன் இருக்கும் துருப்புக்களைத் தாக்கவேண்டாம். எதிரி உங்களின் முன்னால் ஆடவிட்டு ஆசைகாட்டும் இரைகளை விழுங்கவேண்டாம்.

– சண் சூ இன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுரபி பதிப்பகம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org